மருதமடுச் சிறப்பிதழ்

# காவலன்

கத்தோலிக்க வார வெளியீடு ( செய்தித்தாளாகப் பதிவுபெற்றது )

94-ம் புத். | 1969-ம் ஆண்டு ஆவணி மாதம் 16-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 31-ம் இல.

## இன்பமடு எழிலரசி

காவிலே கவினழகாய்த் திகழ்ந்திடும் சோலையின் நடுவிலே அலைந்திடும் ஆழிபோல் விளங்கிடும் வாவியின் மருங்கினில் திருக்கோவில் கொண்டு திருவருள்புரிந்து வரும் மருதமடுச் செபமாலை அன்னையின் மகிமையை எடுத்துரைக்க வல்லவர் யார்?

இத்திருத்தலத்தில் யாத்திரிகர்கள், எங்கள் தாயே என்னும் இனிமை, இதயமே மேலெழும்; அன்னையின் தாமரைமலரனைய திருவதன அழகினில் ஆனந்தம மேலிடும்; வருணனை நிறைந்திடும் மாதாவின் சொரூப அலங்கிர்த வடிவினில் மனமெல்லாம் மகிழ்ந்திடும்; யாழினை வீணையின்நாத மெல்லோசையில் பண்களே பாடிடும்; எழிலரசியின் மலரடிகளில் துதிமலர் கூடிடும்; அருள் நிறைமாமரி செபமாலையன்னையின் பெருமையை இயம்பிடல் இயலுமோ?

லீலிமலர்த் தூய்மை மங்க, வானநிலா சோதிநீங்க, சேலையணி கதிரிலங்க, தேவ இராணி ஜென்மம் துலங்க மகிமை பெற்ருர். எல்லா உலகும் நற்புகழ் கூற, சந்திர சூரியன் வந்தனைபுகல, புள்ளு விலங்கினம் மெல்லிசைபாட, ஞாலமே புகழ்ந் தென்றும் நாவார வாழ்த்தப் புகழ்பெற்ருர்.

இருளடர் பாவம் எங்கும் நீங்க, அருள்சுடர் உதயம் போன்றிலங்க ஒளிபடர் தூயடிவணங்க, உத்தமியாய் வந்துதித்தார். அலைகடலிலே ஒளிரும் மீனுய், ஆண்டவரின் திருத்தாயாய், நிலையுறு கன்னிமரியாய் நிலமிசைவந்துதித்தார். ஆதிபிதாவின் அருமைத் திருமகவாய், பூதலம் வாழ் மக்களுக்குப் புண்ணியம்செய் அருமைத் தாயாய், சாந்தமே உருவாகித் தரணியில் தயைமிகுந்த கன்னிகையாய், மன்னவன் தாவீதின் மகிழ்வுறு மாணிக்கமாய், தவவழிகாட்டிப் பவவழி நீக்கும் தாரகையாய் வந்துதித்தார்.

வான்பதி நின்று வந்த வானவன் கபிரியேலின் மங்கள மொழியைக் கேட்டு மகிழ்ச்சியே பொங்கினின்ருர். தூய்மை நிறை ஆவியினுல் வார்த்தையின் சுதனையேற்று வந்தனைபலவும்சாற்றி வாழ்த்தியேநின்ற கன்னிகை, மைந்தனை உதரந்தாங்கி நிந்தனை நிறைந்த உலகினை மீட்கவோர் வழியாய் வந்தார்.

அற்புததாரகைஅழகுடன் விளங்கிட, விண்ணவர் வானிலே பண்ணிசைக்க, அவனியில் நல்மனதோர் அமைதி பெற, அன்புதரும் இரட்சகரை ஆவலுடனே பெத்லகேம் மாநகரிற் பெற்றுத் தந்தார்.

ஆதவனின் கதிரொளியை ஆடையாய் அணிந்து, பன்னிரு நட்சத்திரங்கள் முடியாய்இலங்க, வெண்மதியைத் திருவடிகளால் மிதிக்கும் அழகுடன் மேன்மைபெற்று வானுலகுக் கெழுந்தருளி வானவர்க்கெல்லாம் மேலாக உயர்த்தப்பட்டுப் பரலோக பூலோக இராக்கினியாக முடிசூட்டப்பெற்றுத் தமது திருக்குமாரனின்அருகிருந்து செங்கோல் செலுத்தி வருகின்ருர்.

**ஆசிரியர்: எவ். எஸ். சி. வங்காலை**

லூர்து, பாத்திமாமுதலாய புண்ணிய பூமிகளிற் கருணை மழைபொழிந்து, திருவருள் புரிந்து, திருயாத்திரைசெய்து வரும் பக்தர்களை அன்புடன் அழைப்பதுபோல, மருதமடுத் திருப்பதியிலும் யாத்திரிகர்களை ஆவலுடன் அழைக்கிருர் மருதமடுச் செபமாலைமாதா. அதனுல் இத்திருப்பதிக்குத் திருயாத்திரை செய்யாத பக்தர்களில்லை; தாயின் திருமுகம் நோக்காத தனையரில்லை; செய்ய பாதங்களிற திருப்புகழ்சாற்ருத சேயரில்லை; கண்ணியமுடன் காணிக்கை செலுத்தாத அன்பர்களில்லை; பக்தர்களின் காணிக்கையைப் பரிவுடன் ஏற்று, துன்புறும் அன்பர்களின் துயர்நீக்கித் துணைபுரிய என்றும் தயாளசிந்தையுடன் இருக்கின்ருர் மருதமடுமாதா.



தெய்வீகனைத் தந்த சீலி, திக்கற்ருேர்க்குப் பேருதவி, தீராத நோய்களுக்குத் திருமூலி, பவம்நீங்கி உய்வதற்குப் பேரருள்பாலி என்று கூவித் தொழுதுநிற்கும் பாவிகள் மனந்திரும்பி நல்வழி நாட, மூவுலகின் இராணிஎன்றும் அருள்புரிவார்.

அம்மா தாயே! தஞ்சமென்றடைய இடமோ இல்லை; சஞ்சலமகற்றத் தாதையுமில்லை; ஆறுதல் உரைக்க அன்னையுமில்லை. என்செய்வேன்; நீர் கரடிபுலிவாழும் கானகத்தூடே எழுந்தருளியிருந்து ஆறுதலற்றவர்களையும் கிலேச முற்றவாகளையும் உமது சந்நிதிக்கு அழைக்கிறீர் என்று புலம்பும் மன்ருட்டை மிகுந்த கருணையுடன் கேட்டும், காடுகள், ஆறுகள் கடந்துவந்தோம், கானக செல்வியே உம்மைக் காணவந்தோம்; நீடுறு துயரமெலாம் போக்க வந்தோம். நீங்காத அடைக்கலம் தந்தெமைக் காத்தருள் என்று நெஞ்சம் கலங்கிக் கெஞ்சி அழுவதைத் திருக்கண்ணேக்கிப் பார்த்தும், தயைமிகுந்த மருதமடுமாதா அருள்புரிந்து வருகின்ருர்.

மங்காத கற்பொளிர் மாணிக்கமே! நீர் கர்த்தனின் திருத்தாயாய் விளங்குகின்றீர்; கன்னிமைகாத்திடும் பழுதற்ற கன்னிகையாய்த் துலங்குகின்றீர்; காரிருள் ஓட்டிப் பேரொளி காட்டும் தாரகையாய் ஒளிருகின்றீர்; இத்தரையிற் பாவிகளைக் காத்திடும் இரட்சகியாய் இலங்குகின்றீர். ஆதலால் இருள்படர்ந்து ஒளியிழந்து, கதிநினைந்து துதிகூற வந்திருக்கும் திருயாத்திரைப் பக்தர்களின் கறைநீக்கித் துயர்போக்கி மோட்ச அறைசேர்க்க வரமருளுந்தாயே என்று ஆவலோடு கூவியழும் அடியவரின் மிடிமைநீங்க அருள் புரிவார்

(தொடர்ச்சி 6-ம பக்கம்)

## மனமே வாழ்த்து!

— 'தாசு' —

அருள்பூத்த விண்மணியை
ஆன்ருேர்கள் கண்மணியை
பொருள்பூத்த மடுவிலுறை
புண்ணியசம் பூரணியை
தெருள்பூத்த மெய்த்தேவ
அன்னையெனும் ஆண்டவளை
இருள்பூத்த என்மனமே
என்றென்றும் வாழ்த்துவையே.

✻

கரடிபுலி கரிவாழுங்
கானகத்தி லெழுந்தருளிக்
குருடுகூன் செவிடூமை
பிணிபலவும் போக்கிடுநல்
அரவுமிதி பதமுடைய
ஆண்டாளாம் மடுத்தாயை
இரவுபகல் சிந்தித்து
ஏற்றிடுவாய் என்மனமே.

✻

என்னபிழை செய்தாலும்
ஈன்ருள் அழுங்குழந்தை
தன்னகநொந் திடச்சினந்து
தள்ளுவளோ இல்லையில்லை
மன்னர்குலக் கன்னிகையாம்
மாமடுவாழ் தாய்மரியின்
பொன்னடியை யெப்போதும்
போற்றிடுவாய் என்மனமே.

✻

தேடுகின்ருய் புன்பொருளைத்
தீங்குசெய்யு மாசையினுல்
பாடுகின்ருய் புன்கவிகள்
பயனுளதோ என்மனமே
ஆடுகின்ருய் பாடுகின்ருய்
ஆயபயன் ஏதுகண்டாய்
காடுறையும் மடுவிலுறை
கனிமரியைத் தொழுவாயே.

✻

முட்டைவழிக் குஞ்சுகட்கு
மோசம்வரக் கண்டவொரு
பெட்டையவற் றைச்சிறைக்குள்
பேணுவபோல் நின்கருணைச்
சட்டைதனைப் போர்த்தியெனைத்
தற்காத்தல் தக்கதலோ
நிட்டைதரும் நிமலி நீ
மடுத்தாயே ஆசியருள்.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வும் வழிபாடும்

— ச. வில்பிறெட் —

மானிலம் தழைக்க, மக்களினம் மலைக்க, வானவர் மகிழ, வையகம் புகழ மண்ணகத்தே வந்துதித்தார் மாமன்னன் யேசு அண்ணல். மாதவத்தோன், மக்களின் மீட்பையே தன் வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்டார். இரட்சணியம் வேண்டி மாகொடிய மனிதர்களால், கசையடிபட்டார், கழுமரம் சுமந்தார், இரு கள்வர் மத்தியில் கடோரமாய் மரித்தார், உயிர்த்தார், மனிதனைக் கடவுளோடு இணைத்தார். ஆம், ஆதாம் பாவத்தால், மனிதனையும் கடவுளையும் இணைத்திருந்த அன்பென்னும் கயிறு துண்டிக்கப்பட்டது. உறவு ஒழிந்தது. மனித இனம் சீர்குலைந்தது. சீர்குலைந்த மக்களினத்தை சீர்ப்படுத்தினார் சீவ பிதா மகன் யேசு.

கல்வாரியில் அடைந்த பேறு பலன்களைக் கசடர்களுக்களித்தார். இப்பேற்றின் மூலம புனர்வாழ்வு கண்டோம, புது வாழ்வு கொண்டோம். இரட்சணிய பாதையினின்று தவறிய மனுக்குலம் செவ்வையாக்கப்பட்டது. இப்பொழுது மனிதன கடவுளைக் கண்டான, புது உறவு கொண்டான், பாவத்தை வென்றான், நல்வாழ்வில் நின்றான்.

நாம் மோட்சத்தில் இன்புற்று நித்திய பேரன்பு கொள்ள நாதன் காட்டிய வழியே திருச்சபை. திருச்சபையின்மூலம் மனிதன் கடவுளிடம் நெருங்கி நெருங்கிச் செல்லுகிறான். கிறிஸ்து மனித உருவில் மக்கள் நடுவில் என்றும் வாழ விருப்பம் கொண்டாரில்லை. அவர் தம் திருப்பணியைத் தம் அன்பு சீடராம் அப்போஸ்தலரிடம் ஒப்படைத்தார். அவர்கள் வாழையடி வாழையாகத் தம் குருவின் திருததொண்டைத் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறார்கள், இனிதே இயக்கிவருகிறார்கள். அதில் (மீட்புச் செயலில்) வழிபாடும் ஒன்று.

### ஆதி மனிதனின் வழிபாடு

ஆதியில் மனிதன் ஆடையின்றி வேடுவனாய் அலைந்தான். வெயிலும் மழையும், இருளும் இடிமின்னல்களும் அவனை அச்சுறுத்திய போதிலும் அன்று அவன அஞ்சினானில்லை. ஆனால் காலவெள்ளத்தில் எப்படியோ வாழ்வைப் போக்கிய அவனை இயற்கையின் நியதி தொட்டுவிளையாடாமல் விட்டுவிடவுமில்லை. இயற்கையின் நியதிகள் அவனை நடுநடுங்கச் செய்தன. எல்லையற்ற வான்வெளியின் விரிவைக் கண்டான், வியந்தான். அதில் ஒளிதரும், ஒளியோடு உஷ்ணம் தரும் கதிரவனைக் கண்டான். உடலில் அதன் வெப்பத்தை உணர்ந்து அஞ்சினான். அதனிடம் ஏதோ ஒரு சக்தி உண்டென அறிந்து அதனை வழிபட முனைந்தான்.

பொருட்களைச் சுட்டெரிக்கும், இருப்பதை அழிக்கும் இல்லாத பொருளை உண்டாக்கும் எரி நெருப்பைக் கண்டான். அதனிடம் நெருங்கப் பயந்தான். அதனிடம பயமும் பக்தியும் வைத்தான். ஆகவே அதையும் வணங்க முன்வந்தான் மனிதன்.

ஆதிமனிதன், கடவுள் தன் கண்களுக்கு எட்டாதவர் காணமுடியாத பரம் பொருள் என்பதை அறிந்திருந்தான். வானில் உயர்ந்தெழுந்து மேகம் மறைக்கும்வரை பறந்து சென்ற, சுழன்று வட்டமிட்ட கழுகினைக் கண்டான். அதனிடமும் இறைவனின் சக்தியை வல்லமையைக் கண்டு வியப்புற்றான். அதனையும் மனிதன் கடவுளாக மதித்தான். இப்படி எத்தனையோ இயற்கையின் எழில்களை, நியதிகளை வழிபடத் தொடங்கினான்.

உலகில் காணும் பிற உயிரினங்களை மனிதன் கணணுற்றான். அதனிடமில்லாத ஒரு சக்தியை மனிதன் தன்னிடம் கண்டான். தான் ஓர் அரிய படைப்பு என்பதை உணர்ந்தான். எனவே தன்னையும் தன்னைச் சூழவுள்ள பொருட்களையும் படைத்த எல்லாம் வல்ல இறைவனை வழிபட எண்ணம் கொண்டான். இறைவனின் இணையற்ற ஆற்றலையும் எல்லையற்ற நன்மைத்தனத்தையும் சொல்லற்கரிய பண்புகளையும் கண்டுணர்ந்து, தன்னை அவருக்குக் கீழ்ப்படுத்தி அவரை ஆராதிக்க, நன்றி நவில முயன்றிருக்க வேண்டும்.

இப்படி ஆதிமனிதனின் வழிபாடு நடந்தேறியிருக்கலாம்.

### கிறிஸ்து அமைத்த வழிபாடு

'சருவேசுரன் நம்மை முந்தி நேசித்து (சிநேகித்து) நம்முடைய பாவங்களுக்குப் பரிகாரமாக தமது குமாரனை அனுப்பினதிலே அவருடைய அன்பு இன்னதென்று விளங்குகிறது.' (1 அரு. 4 : 10) என்கிறார் புனித அருளப்பர்.

இறைவனே நம்மை முந்த முந்த அன்பு செய்கிறார். அவரே நீச மனிதனைத் தேடி வருகிறார். பாவச்சேற்றில் அமிழ்ந்திருந்த மனிதனைக் கைதூக்க விண்ணகம் நின்று மண்ணகம் வந்தார். பாவமாசணுக முடியாதபரம்பொருள் பாவியோடு பாவியாக, ஏழையோடு ஏழையாக இவ்வுலகினை வதிந்தார், குடிபுகுந்தார். இதைப் புனித அருளப்பர் சிறப்பாகத் தமது சுவிசேஷத்தில் எடுத்துரைக்கின்றார்.

'வார்த்தையானவர் மனுவுருவானார், நம்மிடையே குடிகொண்டார்'. அரு. 1 : 14. எனவே மனிதன் கடவுள்மீது அன்பு கொள்கிறான். அவரின் திருவடிகளை முத்தமிட ஓடுகிறான். அற்புத தெய்வத்தின் அருள் பெறத் துடிக்கிறான். பலிகளையும் செபங்களையும் ஆராதனைகளையும் இறைவனுக்குச் சமர்ப்பிக்கிறான்.

பரமபிதா, மானிடரின் அன்பைப் பெற இறைமகனை அனுப்பினார். அவரின் அன்பைப் பெற்றால் நமது வாழ்வு இறை அன்பு வாழ்வாகவும் பிறர் அன்பு வாழ்வாகவும் மாறும். வானவன் கிறிஸ்து மண்ணில் தோன்றி மானிடரின் வழிபாட்டைப் புதுப்பித்தார் — மாற்றியமைத்தார். தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவில் அவர் நடத்திய வழிபாட்டைப் புதிய முறையில், சிறந்த முறையில் பிறர் அன்புச் சடங்காக நடத்தலானார்.

கடல் தொழிலைப் பிழைப்பாகக்கொண்ட மீனவர்களின் கால்களைக் கழுவி, அவர்களோடு பந்தியமர்ந்து தமது புதுவழிபாட்டை இயக்கினார். இதையே ஆதிக் கிறிஸ்தவர்கள் செய்து வந்தனர். 'ஒருமனப்பட்டவர்களாய் அப்போஸ்தலர்களுடைய படிப்பினைகளில் நின்று அப்பம் பிடுவதிலும், செபத்திலும், கடவுளைப் புகழ்வதிலும் நிலைத்திருந்தனர்.' (அப்.நடபடி 2:41,42)

எனவே எமது திருச்சபை கிறிஸ்து அண்ணலின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அப்போஸ்தலர்களின் படிப்பினைகளில் நிலைநின்று நற்கருணைப் பந்தியை, அருட்சாதனப் பலியை நிறைவேற்றி வருகிறது. எனவே "பாஸ்கா அருட்சாதனமாகிய நற்கருணைப் பலியையும் மற்ற அருட்சாதனங்களையும் மையமாகக் கொண்டே திருவழிபாடு முழுதும் அமைகிறது" (சங்கஏடு திருவழிபாடு அதி.1)

### திருவழிபாடு என்றால்............

திருச்சபை கிறிஸ்துவின் மறையுடல். (1கொரி. 10 : 7) கிறீஸ்து தலை. திருச்சபை விசுவாசிகள் அதன் உறுப்புக்கள். தலையாகிய கிறீஸ்து வழியாக, அங்கத்தினர்களாகிய திருச்சபைக் கூட்டத்தினர் விண்ணகதந்தைக்குச் செலுத்தும் அதிஉன்னத—முழு—பொது வழிபாடே திருவழிபாடாகும்.

கிறீஸ்து தமது பாடுகள் மரணம், உயிர்ப்பு, உத்தானம் இவற்றால் சம்பாதித்த பேறுபலன்களைத் திருவழிபாட்டின் வழியாக ஒவ்வொரு மனிதனுக்கும் பகிர்ந்தளிக்கிறார்.

பாவம் இழைத்த மனிதன் கடவுளை அன்பு செய்ய, அவர் வாழ்வில் பங்குபெறத் தகுதியற்றவன். இயற்கை வாழ்வில (Natural life) கடவுளை ஓரளவு அன்பு செய்யலாம. கடவுள் தன்னை நேர்முகமாக அன்பு செய்ய வேண்டுமென விரும்புகிறார். இது மனிதனால் முடியாது. இது சுபாவத்துக்கு மேற்பட்ட விடயம். ஆகவே மனிதனின் ஆன்ம தத்தவங்களைக் கடவுள் உயர்த்துகிறார், அருளைப் பொழிகிறார். இறைவனை அன்பு செய்ய அருள் தேவை. இவ்வருளை அருட்சாதனங்கள், அருட்குறிகள், மறைச் சொற் பொழிவுகள், திருப்பலி போன்ற திருவழிபாட்டுச் சடங்குகள் மூலம் பெறுகிறோம்.

வழிபாட்டின் சிகரமாகத் திகழ்வது பூசைப்பலி. மனிதன் இறைவனுக்கு அளவற்ற துரோகம செய்தான். அதற்குப் பரிகாரம் செய்ய அளவுள்ள மனிதனால் இயலாது. எனவே கடவுளே தோன்றி அதி உன்னத பலியின் மூலம் மக்களினத்தை, பாவப்பிடியினின்று மீட்கத் தன்னையே பலியாக, கழுமரத்திற்குக் கையளித்தார்.

கல்வாரியில் கழுவில் தொங்கிய கிறீஸ்துவை திருவழிபாட்டில் (பூசையில்) காண்கிறான் மனிதன். புதிய கிறீஸ்துவைத் தரிசிக்கிறான். நற்கருணைப் பந்தியில் கிறீஸ்துவோடு உறவாடுகிறான். நெருங்கிப் பழகுகிறான். அவருடன் உரையாடுகிறான். இவ்வுலகின் முடிவில் அவருடன் முடிவில்லா இன்பம் துய்க்க, அவருடைய வாழ்வில் பங்குபெற ஆசிக்கிறான். இப்படி நாம் கிறீஸ்துவோடு திருவழிபாட்டில் ஐக்கியமாகிறோம்.

---

## "வா மகனே செல்வமே"

(ஊதாரிப்பிள்ளையின் உவமை)

— நீ. மரிய சேவியர்

வா மகனே செல்வமே — வந்து
தா நிதமே இன்பத்தால் உளமே — பொங்க

நிலை கெடு மது மாதுன் விதியானதோ
வலை இடு சகவாசம் சதியானதோ
வறுமையில் உனதாட்டம் முடிவானதோ
உளமேவாடி ஒருதினமும் உறங்காது
உள்ள பாசம் குறையாது தந்தைவீடு
— வா மகனே செல்வமே

பன்றிகள் வீங்கவோ
குன்றிலே ஏங்கவோ
ஒன்றுமே இல்லாமல்
பட்டினியும் தாங்கவோ
மைந்தனே நொந்தாலும்
தந்தையோ பிந்தாது
பரமபாவி மனம் மாறி அடிவிழவும்
வாரி நீ எனது பிள்ளை
என்று கனிவுடன் — வா மகனே செல்வமே.

(திருமறைக் கலாமன்றத்தினரின் "அன்பில் மலர்ந்த அமர காவியம்" என்னும் இசை—உரை—நாடகச் சித்திரத்தில் ஒரு காட்சியாக அமைக்கப்பட்டது.)

---

## மருதமடு மாதாவை இறைஞ்சல்

ராகம் சன்முகப்பிரியா தாளம் ஆதி.

பல்லவி

மருதமடுவிலுறை தாயே மரியாயே அருள் நீயே புரிவாயே

அநுபல்லவி

கரடிபுலி வாழும் கானகத்தூடே
கருணை முகிலே உமைக் காண்ப தென்னாளே
அரவுதனை மிதித்த அன்னையும் மாலே
அடியேன் துயர் தீர்க்க வல்லையோ மனமில்லையோ இது
[தொல்லையோ மனமில்லையோ

பதமதால் சந்திரனை மிதித்த எம்தாயே
பாவி எமைக் கடைக் கண்பார்த் தாளுவாயே
புவிதனி லுமை இன்றி ஆதர வெனக்கு
புகலிடமி லையறிவாயே இனி நீயே அருள்வாயே
[மரியாயே

அருணனை ஆடையாய் அணிந்த என்தாயே
அன்பினை ஆடையாய் அணியச் செய்வாயே
அலை கடல் சூழ்ந்திடும் அம்புவி மீதே
அடியோரை அன்பு கொள்வாயே அருள்வாயே மரி
[யாயே அருள்வாயே

மழை முகம் காணுத பயி ரெனவாடி
மாதாவை விட்டகன்ற மதலைபோல் வாடினேன்
புரிவா யெனக்குன் அருள் கோடானு கோடி
புனிதமடுவி லுறை தாயே மரியாயே அருள் நீயே
[புரிவாயே

அஞ்சுதலையாய் நின்று அலைகிறேன் தாயே
ஆறுதலைத்தந் தெனை ஆட்கொள்ளு வாயே
மிஞ்சிடும் அலகையுன் மிதி பதத் தாலே
விலகிட அருள்புரி வாயே மரியாயே அருள் நீயே
[புரிவாயே

சந்திரன் மீதமர்ந்த தாயே முன்னாளில்
சகல உலகெங்கனும் தாண்டிச் சென்றாயே
அந்தரம் தனிலே ஆறுதல் நீயே
அருள்பர மண்டலத்தின் தாயே மரியாயே அருள்நீயே
[தருவாயே

கண்கள்பல இருந்தும் காண்டல் செய்யாயா
கவலைப் படுவதை யுன் கருத்தில் வையாயா
பண்க ளியற்றி னோர்க்கு பரமசகாயி
பக்தர்க்கி ரங்கும் தயாபரியே மனோ கரியே சற்பாத்தி
[ரியே எழில்வதியே

ம. வேதநாயகம் முடியப்பர்,
விடத்தல்தீவு

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்றின் பின் ஒன்றாய்

எம்மில் அநேகர் தம்மை அண்டி நெருங்கி வந்துகொண்டிருக்கும் தமது முடிவைப் பொதுவாக நினைப்பதேயில்லை. என்றாலும் அன்பின் தேவன் எமக்கு அதை இடைவிடாமல் நினைவுறுத்திக் கொண்டே வருகிறார். ஒன்றின்பின் ஒன்றாய் எமது மயிர்கள் விழுகின்றன, ஒன்றின்பின் ஒன்றாய் எமது பற்கள் விழுகின்றன, சன்னம் சன்னமாய் எமது அழகு மறைகின்றது. கொஞ்சம் கொஞ்சமாய் எமது பெலன் குன்றுகின்றது. மெல்ல மெல்லவாய் எமது பார்வை குறைகின்றது. ஒருவர் பின் ஒருவராய் எமது உற்ற நண்பர்கள், நெருங்கிய இனபந்துக்கள் சடுதியாய் மரணத்திரையில் மறைகிறார்கள். ஒரு சடுதி மரணத்தைப் பற்றிக் கேள்விப்பட்டவுடனே திடுக்கிடுகிறோம், யோசிக்கிறோம். ஆனால் அடுத்த நிமிடம் எல்லாவற்றையும் மறந்து எமது பழைய சீவியத்தைச் சீவிக்கத் தொடங்கிவிடுகிறோம்.

என்றாலும் இரக்கமுள்ள கடவுள் நித்தியம் எவ்வளவு அண்மையில் இருக்கிறதென்பதை எமக்கு ஓயாமல் சிறு சிறு சம்பவங்களால் நினைப்பூட்டிக் கொண்டேவருகிறார்.

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிஷமும் நாம் எமது சவக்கிடங்கை நோக்கி முன்னேறிக் கொண்டேயிருக்கிறோம். எப்போ அதில் இறங்குவோமென்பது நிச்சயமாய்த் தெரியாது.

ஆகவே உண்மையான புத்திசாலிகள் தமக்கு வர இருக்கும் அகோரமான காரியங்களின் முன்னோடிகளாகிய இச்சிறுசிறு சம்பவங்களை அவதானித்துப் பிரயோசனமடைவார்கள் என்பது நிச்சயம்.

“மனுமகன் கள்ளனைப் போல் நினைக்காத நேரம் உன்னிடம் கணக்சக் கேட்க வருவார் ஆகவே எப்போதும் ஆயத்தமாயிருப்பதே புத்திசாலித்தனத்தின் சிகரம்.”

## மரதன் ஓட்டப் பந்தயம்

முன்னாளில் பாரசிகருக்கும் கிரேக்கருக்கும் மரதன் என்ற இடத்தில் போர் நடந்தது. கிரேக்கரின் வாழ்வை நிர்ணயிக்கும் போராக இது இருந்தது. போரின் முடிவில் கிரேக்கரே வெற்றி பெற்றனர். வெற்றிச் செய்தியை மக்களுக்குத் தெரிவிக்க மரதனிலிருந்து அதென்ஸ் நகருக்கு(கிரேக்க நாட்டின் தலைநகர்) ஒரு வீரன் ஓடிவந்தான். 26 மைல் 285 கெஜதூரம் ஓடிவந்து வெற்றிச்செய்தியைக் தனது நாட்டு மககளுக்கு அறிவித்தான். அதன் நினைவாக ஏற்பட்டதுதான் இந்த மரதன் ஓட்டப் பந்தயம்.


வெளிவந்து விட்டது!
விற்பனையாகின்றது!

திருத்திய
புதிய பதிப்பு

கிடைக்குமிடம்:
அர்ச். சூசைமாமுனிவர் புத்தகசாலை,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: மடுயாத்திரிகர்கள் திருப்பதியில் அமைந்திருக்கும் காவலன் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.



செபச் செண்டு


## அருணோதயம்போல் எழுந்து வருகிற இவள் யார்?

— ஆசிரியர் எவ். சி. வேதநாயகம் —

கீழைத் தேசத்தில் ஒரு நகரம். அங்கே ஒரு வீடு. அதன் உள்ளறையொன்றில் ஒரு யூதஅழகி முழந்தாட்படியிட்டுச் செபித்துக் கொண்டிருந்தாள். அன்று எழுந்த ஆதவனின் ஒளிக் கதிர்கள் அவள் வீட்டுச் சுவரில்பட்டுத் தெறித்துத் தரையில் அழகுக் கம்பளம் போல் ஜொலித்தது. காலைப் பட்சிகளின் மெல்லிசையும், விருட்சங்களில் விளையாடி வந்த கானமும் அவள் செபித்துக்கொண்டிருந்த அறையின் அமைதிக்கு அழகூட்டியது. **“அருள் நிறைந்த மரியாயே!”** கானத்தில் மிதந்து வந்த அந்த ஓசை கேட்டு மரியாள் தன் தலையை நிமிர்த்திப் பார்த்தாள். அமலனின் அலங்கார சோதியில் அங்கே ஒரு வான தூதுவனைக் கண்டாள். ஆண்டவருடைய சம்மனசானவர் ‘செய்தியைக் கொடுத்தார். மரியாள் மீண்டும் தனிமையானாள். அந்த அருணோதயத்தில் அவளுக்குக்கிடைத்த செய்தி அவளுடைய **‘விண்ணேற்றத்தை’** மண்ணுலகிற் கறிவித்தது.

பாரம்பரையான நம்பிக்கையின்படி ஒன்பதாவது மணியில் அதாவது பிற்பகல் மூன்று மணியளவில் இது சம்பவித்தது. கல்வாரிமலையில் அந்தப் பெரிய வெள்ளிக்கிழமை கொடுத்த பொறுப் பேற்ற பேதுருவும், யுவானியும் மரியாளின் அருகே கரங்கூப்பியவண்ணமிருக்க சம்மனசுகளின் அரவணைப்பிலிருந்தவாறே மரியாள் தமதினிய குமாரனின் நாமத்தைச் செபித்தவாறே தனது இறுதிமூச்சை ஈசனடிக்கனுப்பினாள். ஆம்! மரணத்திரையில் மறைந்தாள்.

ஒலிவ் மலையில் ஓர் அழகிய நந்தவனம். அங்கேயொரு புதிய கல்லறை. மரியாளின் மேனி பிசங்காத பட்டுப் போல பிரகாசித்துக் கொண்டிருந்தது. மூன்றாம் நாள் வானைப் பிளந்துவந்த ஓசையிது. “எழுந்தருளு என் அன்பே! என் அழகு சௌந்தரியமே! உனது, சந்திரனைப் போல் சௌந்தரியமும், சூரியனைப்போல்பிரகாசமுமுள்ள முகத்தைக் காட்டு” என்றது அமலனின் அழைப்பு. கடைசிநாள் நடுத்தீர்வை நாள்வரை இச்சம்பவம் காத்திருக்கவில்லை. இறைவன் பேசியிருக்கிறார். “மரியாள் சீவிக்கிறாள். என்றும் சீவிக்கிறாள். அவளின் ஆன்மா சரீரத்தோடு ஈடில்லா இன்பமயமாகச் சேர்ந்து விடுகிறது”. வானதூதுவர்கள் கான மழை பொழிய, மோட்சமுடி சூட்டப் பிதா, சுதன், பரிசுத்த ஆவியானவர் வரவேற்க, சந்திரனைப்போல் சௌந்தர்யமுள்ளவளாயும் சூரியனைப் போல் பிரகாசமுள்ளவளாயும், போரணியாய் வகுக்கப்பட்ட சேனையைப்போல் பயங்கரம் வருவிக்கின்றவளுமாய், உதய காலத்தைப் போல் அதோ எழுகின்றாள்.

என்ன மகத்துவம்! பாரீர். ‘விண்ணேற்ற விழா’ ஓர் சிறந்தவிழா. மரியாள் எங்கள் தாய் எங்களைவிட்டுப் போகவில்லை. பாவிகளாகிய எங்களுக்காகப் பரிந்து பேசுகிறாள். அந்தநாள் வரும். அந்நாளை நினைவு கூர்ந்து அவள் ஆரோபணமான சுபதினத்தை ஆவணி பதினைந்தில் அகிலமே ஆனந்த சோபனங் கொண்டாடுகிறது.

*** சமர்ப்பணம்.:**

எங்கள் ‘காவலன்’ கையிழந்து தவிக்கும் தளராத எழுத்தாளனும், திருமறையின் உத்தம புதல்வனுமாகிய காலஞ்சென்ற திரு P. சவரிமுத்து அவர்களின் மரணங் குறித்து அவர் ஆன்மா சாந்தியடைய காவலனின் ஓர் எழுத்தாளனாகிய அடியேன் இக்கட்டுரையை அன்னை மரியாளுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

## மருதமடு மரியன்னைமேல் வாழ்த்து

க. மரிசால் பிள்ளை—( பெரியகட்டைக்காட்டுப் புலவர் )

### வெண்பா

ஆனாளின் மாமகளாய் ஆதரையில் வந்தேவாள்
மேனாட்செய் தீவினையால் மீட்கவெமை—வானாடர்
போற்றும் பராபரத்தைப் புல்லணையி லீன்றவன்னை
தோற்றுமலர்த் தாளே துணை

### எண்சீர் விருத்தம்

அஞ்ஞான விருளொதுங்க அடியா ருள்ளத்
தகலாது அருட்பிரபை ஞான மோங்க
உய்ஞ்ஞான அமுதூறும் உடை யவனை
உலகுளோர் அனுதினமும் உவந்து போற்ற
மெய்ஞ்ஞான மறைவிளக்காய் விளங்கச் செந்தி
விரிகரிற் பேயினங்கள் விழுந்து மாள்க
எஞ்ஞான்று மருதமடு எழிற் பதியாள்
எமதன்னை இருபாதம் இறைஞ்சி வாழ்வாம்

செஞ்சுடரி னுடைவிளங்கத் திகாந்த மெங்கும்
செப்பதும மலர்ப்பாதம் விளங்கத் திங்கள்
விஞ்சுசுட ருடுமுடியாய் மிளிர விண்ணோர்
விழைந்தேவல் செய்துவந்து வேண்டி நிற்க
மஞ்சுதவழ் மலர்ப்பூங்கா வனத்தின் நீழல்
மணித்தோகை விரித்தாடு மயில்கள்சூழ
எஞ்சாத வனப்புயரும் மடுப் பதியாள்
எழிற்பாதம் மறவாமல் ஏத்து வோமே

தேங்கமழும் பலாக்கனியைத் திருகி யாய்ந்து
தேனினங்கள் ஆர்க்குமிசை தேனுக் கொப்பத்
தாங்கரத்தி லேந்திமுசுத் தாளம் போடத்
தலைநிமிர்ந்து கலையினங்கள் குதித்துலாவப்
பாங்கரும்புல் வாய்க்குருளை பரிந்து நோக்கப்
பச்சிளம்பூங் கொம்பரிடைக் குயில்கள் பாடும்
வாங்கரிய மலர்ச்சோலை வளைந்து சூழும்
மருதமடுப் பதியாளை வணங்கு வோமே

பூங்காவி லோவவாளும் தனித்த போது
போயலகை மயக்குறவே மொழிந்த பொய்யால்
ஆங்காரும் கனியவளும் அருந்தும் பொல்லா
ஆசகல வந்துதித்த அமலன் சேயை
நீங்காது மலர்க்கரத்தி லேந்தி நித்தம்
நேசமிகு தாசர்தம் துயரம் நீங்கப்
பாங்காக வேண்டுமடுப் பதியி னாளைப்
பரிவாக நாம்வேண்டிப் பணிகு வோமே

இருண்டபெருங் கானகத்தே தனித் திராவில்
இருந்தழுது வழியறியா இளைஞன் போலும்
திரண்டசுளிக கடனடுவே சேர்ந்த நாவாய்
திருகியெழுஞ் சூறைமுன்னே திகைத்தல் போலும்
உருண்டமணி யிழந்தபை நாகம் போலும்
ஒருதவி யற்றேயுன் அன்பை நாடி
அரண்டரு மாமலர்ப்பாத மணியத் தந்தென்
அல்லல் துடைத் தருள்கமடுப் பதியன் னையே

ஆவைமரி யாயே என்றன்பர் நாளும்
ஆவலாய் வணங்கார் வமதனைக் கேட்டு
பூவைகிளி அனுதினமும் புகழ்ந்து பேசும
பூங்காகீதம் பொற்புயரப் புனைந்து சூழும்
கோவைமணிச் சுடரினத்தின் கொழுந்து வீசும்
கோவளவு மடுப்பதியின் கோவரசி தன்னை
நாவளரும் நற்புகழாய்த் துதித்து வாழ்த்தி
நடலையொழிந் திடநயந்து போற்று வோமே

தீராத வறுமைபிணி தீரும் பொல்லாத்
தீயர்புரி தீவினைகள் திகைத்து ஓடும்
நேராது கூழிபகை நில்லா தோடும
நித்தியமும் சுகவாழ்வு நிலைய தாகும்
பேராத மறுமையருள் பேற தாகும்
பிறைநிலவு மரியாளின் பாதம பேணி
ஆராத அன்போடு அர்ச்சித் தேத்தி
அனுதினமு மடிபணிவார்க் கருள்செய் வாயே

## அகில உலக மேற்றிராணிமார் சபையும் பத்திரிகையாளர்களும்

ஐக்கிய அமெரிக்க தேச கத்தோலிக்க பத்திரிகை நிருபர் ஒருவர் இவ்வருடம் ஐப்பசி மாதத்தில் ரோமாபுரியில் நடைபெற இருக்கும் அகில உலக மேற்றிராணிமார் "சினொட்" சபைக்கு உலக பத்திரிகைநிருபர்களும் யாதொரு தடையுமின்றி அனுமதிக்கப்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறார். "நாம் பயப்படுவதற்கு யாதொரு நியாயமுமில்லை; 2-ம் வத்திக்கான் சங்கம் முன்னர் பேசப் பயப்பட்ட கருமங்கள் பலவற்றையும் திறந்த மனப்பான்மையுடன் ஆராய்ந்திருக்கின்றது; பத்திரிகையாளர் சபையிலிருந்து ஒதுக்கப்படுவதால் அவர்களிற் பலர் பிழையான அபிப்பிராயங்களை யூகித்துக்கொள்கின்றனர்" என்பதே இந்த அமெரிக்க கத்தோலிக்க நிருபரின் அபிப்பிராயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையின் திரு உடல் எங்கே?

கி. பி. 451-ம் வருடம். திருச்சபையின் 4-வது பொதுச்சங்கம் கால்செடோன் என்னுமிடத்தில் கூடியது. சங்க பிதாக்கள் திருச்சபையின் கோட்பாடுகளை மும்முரமாக ஆராய்ந்துகொண்டிருந்தவேளை. ரோமானிய சக்கரவர்த்தி மார்சியான் அமைதியாக சங்க மண்டபத்தினுள்ளே வருகை தந்தார். தமது வருகையால் ஆச்சரியமடைந்த திருச்சபையின் ஆயர்களையும், பிதாப்பிதாக்களையும் நோக்கி அவர் கூறினார்:

"பெருமக்களே, எனது நீண்டகால விருப்பொன்றை உங்களிடம் சமர்ப்பிக்கிறேன். தேவ குமாரனின் தாயாகும் பாக்கியம் பெற்று, உலக இரட்சணியத்தில் உன்னத பங்கு கொண்ட கன்னித்தாயின் திருவுடல் எங்கேயுளது? அன்னைமரியைப்புதைத்த புனித தலம் யாது? அவரது பொன்னுடல் ஒருபோதும் மண்ணினுல் அழிக்கப்பட முடியாது. அன்னையின் உடலைத் தேடுங்கள். அவ்விடத்தில் மரியன்னைக்கென மாட்சிமை மிக்கதோர் தேவாலயத்தை எழுப்ப விரும்புகிறேன்".



மன்னரின் செய்தியால் ஆயர்கள் அதிர்ச்சியடைந்தனர். இராயப்பரினதும் சின்னப்பரினதும் கல்லறைகள் எங்கே என்பதை அவர்கள் அறிவார்கள். யேசு பெருமானின் திருப்பாடுகளுடன் பங்குகொண்ட சின்னங்களெல்லாம் சக்கரவர்த்தி கொன்ஸ்தந்தினின் அன்னையான கெலனு சீமாட்டியால் தேடியெடுக்கப்பட்டதை உலகறியும். வேதசாட்சிகள், அர்ச்சியசிட்டர்களின் புனித உடலங்கள் புதைக்கப்பட்ட இடங்களும் திருச்சபைக்குத் தெரியும். அன்னைமரியின் திருவுடலைப்பற்றி உத்தியோகரீதியாக என்ன கூறலாம்?

அத்தருணம், யெருசலேமின் மேற்றிராணியாரான புனிதர் யூவினல் ஆண்டகை எழுந்தார். "மன்னரே, சகோதர ஆயர்களே, மரியன்னையின் இறப்பும், அடக்கமும் பற்றி பாரம்பரியமாக வழங்கி வரும் சரிதையொன்றுதான் இவ்வினுவுக்கு விடையளிக்க வல்லது. அப்பாரம்பரிய வரலாறு எமது விசுவாசத்துக்குரிய ஒருநிகழ்ச்சியைச் சித்தரிக்கிறது.

"தமதன்னையை பரலோகத்துக்கு அழைக்க யேசுபிரான் சித்தமானுர். இச்செய்தியை தூய ஆவியானவரின் ஏவுதலால் அப்போஸ்தலர்கள் அறிந்தனர். யேசுவின் மரணத்தின் பின்னுல் தங்களது வேதபோதகத்தில் ஈடுபட்டிருந்த தோமையார் தவிர்ந்த ஏனையோரனைவரும் அன்னை மரியின் மரணப்படுக்கையண்டை முழந்தாளிட்டு நின்றனர். இறுதிவேதனைகள் எதுவுமின்றி மரியன்னையின் ஆவி அமைதியாக உடலை விட்டுப் பிரிந்தது. அவளது திருவதனம் சூரியனைப்போல பிரகாசித்தது. இரட்சகரின் புனிதவுடலைப் பலமுறை தழுவப்பாக்கியம்பெற்ற அவளது திருக்கரங்கள் மார்பின் மேலாக செபிப்பதுபோன்று ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டிருந்தன. அமைதியாக, ஆனந்தமாக தூங்குபவளாக அன்னை காட்சிதந்தாள்".

"அத்திருக்காட்சியை அப்போஸ்தலர்கள் கண்கொட்டாது கண்டுகளித்தனர். மரியன்னையின் மகிழ்ச்சித்தினமது. தன்புதல்வனைப் போல இவ்வுலகை அவளும் வெற்றி கொண்டுவிட்டாள் அல்லவா? உறவினரான பெண்கள் சிலர் அன்னையின் உடலை அலங்கரித்தனர். அப்போஸ்தலர்கள் பயபக்தியுடன் அப்பொன்னுடலைச் சுமந்து சென்றனர். யோசபாத் கணவாயண்டை அவர்கள் தரித்தனர். அங்கு துக்கு உறுதுணையாகவும் துன்பங்களில் ஆறுதல்தரும் அன்னையாகவும் விளங்கிய மரியன்னையை இறுதியாகக் கண்டு ஆசிபெறஎண்ணி அவர்களனைவரும் விரைந்து வந்தனர்.

"மரியன்னை சுவிசேஷகரான அருளப்பரின் பாதுகாவலில் யெருசலேமில் தங்கியிருந்தாரென்பது நேயர்கள் அறிந்ததே. இந்தியாவில் அன்னையின் திருவுடலம் அடக்கம் செய்யப்பட்டது.

"இந்தியாவின் அப்போஸ்தலரான தோமையார் நீண்ட தூரம் பிரயாணம் செய்ய வேண்டியிருந்ததால் சில தினங்கள் தாமதித்தே யெருசலேமுக்கு வந்துசேர்ந்தார். சேதிகேட்டு ஆருத்துயரமடைந்தார். சகோதர அப்போஸ்தலர்கட்கு கிடைத்த பாக்கியத்தையெண்ணி கண்ணீருகுத்தார். அன்பர்களே அன்னையின் திருவுடலை அடக்கிய புதைகுழியண்டை என்னுடன் வாருங்கள். எனக்காக ஒரே ஒருமுறை அந்தக் கல்லைத் திறவுங்கள். கன்னித்தாயை ஒருகணம் கண்டால் போதும்என்று கெஞ்சினுர்.

"தோமையாரின் துயர்நீக்க அப்போஸ்தலர்கள் விரும்பினர். இச்செயலால் தாங்களும் மரியன்னையின் திருக்காட்சி பெறும்பாக்கியத்தையும் பெறலாம் அல்லவா? அனைவரும் மீண்டும் யோசேபாத் கணவாயண்டை சென்றனர். இருண்டதும் குளிர்மயமானதுமான கல்லறையில் அவர்கள் நுழைந்தபோது நறுமணம் கமழுவதுகண்டு அவர்கள் ஆச்சரியமடைந்தனர். சுகந்தவாசனையினூடே சென்று கல்லறையைத் திறந்தனர்அங்கு அவர்கள் தேடிய அன்னையின் திருவுடல் இல்லை.

"சில நிமிடங்கள் திகைத்துநின்ற அப்போஸ்தலர்கள் சிந்தைதெளிந்தனர். அன்று யேசுபிரானின் திருவுடலைக் காணுது அவர்களபட்ட வேதனை... அப்பப்பா சொல்லுந்தரமல்ல. யேசு உடலுடன் உயிர்த்தெழுந்தார் என்று விசுவசிக்க அவர்களால் முடியவில்லை.

"இன்றோ நிலைமை வேறு. தூயஆவியானவரின் அருள் பெற்ற ஆயர்கள் அவர்கள் மரியன்னை தமது திருக்குமாரனின் பாதையிலேயே சென்றுவிட்டாள். உடலுடன் பரலோகத்துக்கு எடுக்கப்பட்டாள் என்ற உண்மையை அவர்கள் நொடிப்பொழுதில் உணர்ந்து விசுவசித்தனர்".

யெருசலேமின் மேற்றிராணியார் கூறிய இவ்வரலாற்றை பொதுச்சங்க பிதாக்களுள் சிலர் அப்போதுதான் முதன்முதல் அறியவந்தனர். சக்கரவர்த்தி மார்சியான், தனது மனைவி புல்ச்சேரியாவுடன் இவ்வரலாற்றைப் பகிர்ந்துகொண்டான்.

இதிலிருந்து அன்னைமரி மோட்சத்துக்கு ஆரோபணமான திருநாள் மிகப்பிரபல்யமடையத் தொடங்கியது. கத்தோலிக்கர்கள் இதையோர் விசுவாசசத்தியமாக நம்பிக்கை கொண்டனர். எனினும் திருச்சபை வேதப்பிரமாணங்கட்கமைய இச்சத்தியத்தைப் பிரகடனம் செய்யவில்லை என்பதோர் பெருங்குறையாக அண்மைவரையிருந்தது.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# பேசும் பேனு

## அன்னையின் திருவிழா

மரியன்னையின் ஒரு பெருந்தினத்தைக் குறிக்கும் வகையில் மருதமடுவின் ஆடித்திருநாள் கொண்டாடப்படுவது பற்றிச் சிலவாரங்கட்கு முன்னுல் பேசும்பேனு குறிப்பிட்டது நேயர்கட்கு நினைவிருக்கலாம். ஆவணி 15-ல் மருதமடுவில் கொண்டாடப்படும் திருநாளும் மரியன்னையின் மற்றெருரு மகோன்னத நிகழ்ச்சியைக் குறிப்பதாயமைகிறது. மரியன்னையின் சரீரம், ஆத்துமத்தோடு பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட திருநாளை ஆவணி 15-ல் கொண்டாடுகிறோம். மரியன்னையின் புனித சடலத்தை அடக்கம் செய்யப்பட்ட தலம்பற்றி முதலில் கவனிப்போம்.

## யோசேபாத் கணவாய்

பழைய ஜெருசலேம் நகரத்தின் வடபுற மதிலிலிருந்து செங்குத்தாகச் செல்லும் ஒரு பாதையைக் காணலாம். இப்பாதை ஜெருசலேம் தேவாலயத்தின் பக்கமாக மோரியா மலைவரைக்கும் செல்கிறது. இவ்வழியில்தான் ஒலிவேத்து மலையும்காணப்படுகிறது. இந்த இருமலைகட்கும் இடைப்பட்ட கணவாயே யோசேபாத் கணவாய் என அழைக்கப்படுகிறது. உலகின் கடைசிப் பொதுத்தீர்வை அளிக்கப்படும் தலம் இது என கீப்ருசாதியார் இக்கணவாயைக் கருதினர். இதன் காரணமாகவே இறந்தோரின் சடலங்களைப் புதைக்க இங்கு கொணர்ந்தனர் என அறியக்கிடக்கிறது.

## அன்னையின் கல்லறை

இக்கணவாயின் ஒருபக்கமாக ஒரு கற்குகை காணப்படுகிறது. இதுவே மரியன்னையின்திருவுடலையடக்கம்செய்த கல்லறையென விசுவசிக்கப்படுகிறது. யேசுபிரானுடன் சம்பந்தப்பட்ட புனித சின்னங்களைத் தேடுவதற்கு326-ம் ஆண்டில் ஜெருசலேமுக்கு வந்த கெலனு சீமாட்டி இக்கல்லறையைச் சுற்றி ஒரு கோயிலைக் கட்டியெழுப்பினுள். பதினேராம் நூற்றுண்டில் ஜெருசலேமின் அரசபீடத்தை அலங்கரித்த அன்சோ அரசரும் மெலிசண்டா அரசியும் தூர்ந்துபோயிருந்த சிற்றுலயத்தை மீண்டும் சிறப்பாக உருவாக்கினர்.

## இன்றைய நிலை

சிலுவை யுத்தகாலங்களில் பலரின் கைகட்கும் மாறிய மரியன்னையின்கல்லறை இன்று ஆர்மீனிய ஒதோடக்ஸ் திருச்சபையினரின் பொறுப்பில் உள்ளது. கல்லறையின் பக்கமாக ஆர்மீனிய. கிரேக்க, எத்தியோப்பிய திருச்சபையினரின் பீடங்களையும் இஸ்லாமிய மதவழிபாட்டுச் சின்னங்களையும் காணலாம். ஈசானபியின் தாயாரான சித்திமிரியத்தின் கல்லறை இதுவென இஸ்லாமியர்கள் கருதுகின்றனர். இருண்ட கல்லறைக்குள் சென்றுபார்க்க வசதியாகச் சிறு வெளிச்சங்கள் கொடுக்கப்படுகின்றன. ஆவணி பதினைந்திலும் வேறுசில திருநாட்களிலும் பலி ஆராதனை நடாத்தக் கத்தோலிக்க திருச்சபையினருக்கு உரிமையுண்டு.

## இரு சிறு கல்லறைகள்

மரியன்னையின் கல்லறைக்குள்ளாக ஒருபகுதியில் இரு சிறு கல்லறைகளைக் காணலாம், இவை மரியன்னையின் பெற்றோரான யுவக்கிம்முனிந்திரதும், ஆனைள்முனிஸ்வரியினதும் சடலங்கள் புதைக்கப்பட்ட தலங்கள் எனப்பலரும் தவருகக் கருதுகின்றனர். உண்மையில் இவை அன்சோ அரசரதும், அவர்பாரியாரதும் கல்லறைகள் ஆகும்.

## மகுடதாரணம்

மரியன்னை பரலோகத்துக்கு ஆன்ம சரீரத்துடன் எடுத்துக்கொள்ளப்பட்ட நிகழ்ச்சியை நினைவுகூரும்போது திரியேக கடவுளினுல் அன்னைக்குப் பரலோக பூலோக இராக்கினியாக முடிசூட்டப்பட்ட நிகழ்ச்சியையும் நினைவுகூருகின்ரோம். இந்நிகழ்ச்சியை விசேடமாக நினைவுகூருவதற்கென திருச்சபையால் ஸ்தாபிதம் செய்யப்பட்ட தலம் ரோமையிலுள்ள மேரி மஜோர் தேவாலயமாகும். ரோமையிலுள்ள எஸ்குலின் குன்றின்மேல் மரியன்னையினுல் குறித்துக் காட்டப்பட்ட இடத்திலேயே நிறுவி நிற்கும் இவ்வாலயத்தைப் பனிமயமாதா கோவிலெனவும் அழைக்கின்றூர்கள்.

இந்தத் தேவாலயத்திலே தான் யேசுபாலகனை மரியன்னை பிரசவித்தவுடன் வளர்த்திய தொட்டில் அல்லது மாட்டுத்தொழுவம் பாதுகாக்கப் படுகின்றது.


## இடமாற்றம்

இதுகாலவரை,
87, புதிய சோனக தெரு (New Moor Street),
கொழும்பு – 12
என்ற விலாசத்தில் இருந்துவந்த
எமது ஸ்தாபனம்

**வஸ்தியன் & கம்பெனி Ltd.**

தற்போது
187, காலி வீதி (Galle Road), கொள்ளுப்பிட்டி-3
என்ற விலாசத்துக்கு இடம் பெயர்ந்துள்ளதால்,
எமது வாடிக்கையாளர்
இனிமேல் தற்போதைய முகவரியில்
தொடர்புகொள்ளவும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மகளிர் மன்றம்

அன்பு நிறை நேயர்களே!........ அஞ்சலி!

மடுவுக்குப் போகவில்லையா?...... என்று ஒருவர் ஒருவரைப் பார்த்துக் கேட்கத் தொடங்கிவிட்டார்கள் மடு அன்னையின் பக்தர்கள். பாடசாலைகளுக்குத்தான் விடுமுறை காலமாச்சே!...... சிறுவர் குழாம் தம் பெற்றோரை நோக்கி, "நாங்களும் வருவோம்" என்று அடம் பிடித்துக் கிளம்புகிறார்கள் மடு அன்னையின் பாதநிழலில் சில நாட்களைக் கழிக்க; பாடசாலை தொடங்கிவிட்டால் மடுவுக்குப் போக முடியாதே!..... என ஆசிரிய உலகம் ஆர்வமுடன் மூட்டை முடிச்சுகளைக் கட்டி யாத்திரை கிளம்புகிறார்கள். "வருகிற வருஷம் இருக்கிறேனோ என்னமோ தம்பி!...... என்னையும் அந்த மடு ஆச்சியின் முகத்தைப் பார்த்துவிட்டு வர அழைத்துப் போக மாட்டாயா?"..... எனத் தம் கடைசி அஸ்திரத்தைப்பிரயோகித்துக் கிளம்பிவிடுகின்றனர் தாத்தாமாரும், பாட்டிமாரும். எல்லோரையுமே காந்த சக்தியால் இழுக்கின்ற மருதமடு அன்னையின் மாபெருஞ் சிறப்பை என்னென்போம்!......

"அம்மா தாயே!... தஞ்சமென்றடைய இடமோவில்லை; ஆதரவளிக்க மனிதரோவில்லை; சஞ்சலமகற்றத் தாதையுமில்லை; ஆறுதலுரைக்க அன்னையுமில்லை; என் செய்வேன் தாயே! ..." என்று கண்ணீர் வடித்து, மடு அன்னையே தமது கவலையெல்லாம் தீர்க்க வேண்டுமென்று அவளிடம் சொல்லிவிட்டால் போதுமே!..... "நீர் இரங்காவிட்டால் எங்களுக்கு வேறுர் இரங்குவார்?...... நீர் உதவாவிட்டால் எங்களுக்கு வேறுர் உதவுவார்?...... நீர் நினையாவிட்டால் எங்களை வேறுர் நினைப்பார்? ...." என்று கேள்வியின்மேல் கேள்வியாகத் தொடுத்து மடு அன்னையிலேயே தம் முழுப்பொறுப்பையும் விட்டுவிட்டால் நிம்மதி கிட்டிவிடுமே!...... "எங்கள் நம்பிக்கை வீண்போகுமோ? .. எங்கள் மன்றாட்டு மறுக்கப்படுமோ? ... எங்கள் யாத்திரை பலனற்றதாய்ப் போகுமோ?..... உம்முடைய சந்நிதானந்தேடி வந்தோம்; காடுகளைக் கடந்து ஓடிவந்தோம்!...... என்று நம்பிக்கை மொழிகளை அடுக்கி அன்னையின் கருணைநோக்கைத் தம்பால் திருப்பிவிட்டால் கேட்டதெல்லாம் கிடைத்துவிடுமே!......

எனவே, மடுஅன்னையிடம் மக்கள் திரள்திரளாக ஓடிச் செல்வது அதிசயமில்லையே. அன்னைமரி மடுப்பதியில் இருந்து கொண்டே பல வருடங்களாக ஈழநாட்டின் எல்லாச் சாதியத்தினர்க்கும், எல்லாச் சமயத்தினர்க்கும் அள்ளிப் பொழியும் வரப்பிரசாதங்களை அபரிமிதமாக நாமும் அடைய அவளை நோக்கிக் கைநீட்டிப் பிரார்த்திப்போமாக.

ரோஜா.

# மாதாவிடம் சொல்வதுதானே!

"அப்பா!... எனக்கு நூறு மார்க் கிடைத்திருச்சே!..." மழலைத் தொனியில் உரக்கச் சத்தமிட்டுக் கொண்டே உள்ளே ஓடிவந்தாள் சிறுமி சாந்தா. தனது சிலேற் பலகையைப் புத்தகங்களுடன் வைத்தால் தான் எடுத்த நூறு புள்ளி அழிந்துவிடுமே என்ற பயத்தினால் அதை தனியாகத் தன் பிஞ்சு விரல்களில் பிடித்துக் கொண்டிருந்தாள். அப்பா பாஸ்கர் வராந்தாவில் ஓர் நாற்காலியில்தான் இருந்தார். ஆனால், அவரோ சாந்தாவையோ, அவள் பிடித்திருந்த கற்பலகையையோ, அன்றேல் அதில் வெள்ளைச் சோக்குக் கட்டியால் எழுதப்பட்டு மின்னிக்கொண்டிருந்த நூறு புள்ளிகளையோ ஏறெடுத்துப் பார்க்கவே இல்லை. வழமையாக அப்பாவிடமிருந்து சாந்தாவுக்குக் கிடைக்கும் அன்பு முத்தம்கூட அன்று கிடைப்பதாக இல்லை. திகைத்துப் போனாள் சாந்தா. "அப்பா!... என்று!... நான் சொல்றது கேட்கவில்லை, ஏன் அப்பா நீ என்னோடே ஏதாச்சும் பேசவா? என் ஆசை அப்பா இல்லை... இதைப் பாரப்பா!...... பார்த்துவிட்டு வெரிகுட் சாந்தா என்று சொல்லெனப்பா" கெஞ்சினாள் சாந்தா. முகட்டையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த பாஸ்கர் ஆத்திரத்துடன்திரும்பினான். "நூறும் இருநூறும்! ...... இரண்டாயிரத்தை தலைமுழுக்கிட்டு முழிக்கிறேன் நான். நாளைக்கு வேலைக்கே தலை" முழுக்காயிடப் போறது! ......போ சனியனே அப்பாலே! இரண்டு அறைகள் விழுந்தன குழந்தையின் பிஞ்சுக் கன்னத்தில்.

நடுங்கிப் போனாள் சாந்தா. அவள் அப்பாவை இத்தனை உக்கிரவேகத்தில் என்றுமே கண்டதில்லை, திரும்பிப் பார்த்தாள். அம்மாவும் தலைவிரி கோலமாய்க் கண்ணீர் வடித்தபடி படிக்கட்டில் உட்கார்ந்திருந்ததைப் பார்த்தாள். கன்னங்கள் வலித்தன. ஓடிப்போய் விழுந்தாள் அம்மாவின் மடியில். "உங்க ஆத்திரத்தைப் பச்சைக் குழந்தையிடம் காட்டினால் என்னுவது!...... எந்தப் படுபாவி பணத்தைத் திருடினானோ?... அதுக்குக் குழந்தை என்ன செய்யும்?..." சாந்தாவைக் தடவிக் கொடுத்தவாறே பரிந்தாள் அன்னை மல்லிகா. "என்ன செய்வது? எல்லாம்என் தலைவிதி! ..." பெருமூச்செறிந்தவாறே தன் அறையில் நுழைந்து படுக்கையில் விழுந்தான் பாஸ்கர்.

சாந்தாவின் விம்மலொலி சிறிது தணிந்தது. அம்மாவை நிமிர்ந்து பார்த்தாள். "ஏனம்மா அப்பா நோக்கும் அடிச்சிட்டாரா?... ஏனம்மா அழறே" என்று கேட்டவாறே அம்மாவின் கன்னங்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தாள். "இல்லேம்மா! அப்பா அம்மாவுக்கு அடிக்கல்லே. அப்பா தான் பாவம் அவங்க ஆபிசிலே கணக்கிலே வைக்கவேண்டிய பணத்தைத் தொலைச்சிட்டாரு. சேத்தைக்கு லாச்சியை இழுத்துப் பூட்டாமே வந்துட்டாராம் ஞாபகமறதியாய். அதுக்குள்ளே அவர் வைச்ச பணத்தை யாரோ திருடிட்டாங்களாம். நாளைக்கு பெரிய ஆபீசருக்குக் கணக்குக் காட்டாட்டா அப்பாவை ஜெயிலுக்கு அனுப்பிச்சிருவாங்களாமே!..." என்று விளக்கினாள் அம்மா. சாந்தாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. "ஏம்மா!... பணத்தை அப்பாவே கொடுத்திடறது தானே" என்றாள் சாந்தா. "எப்படி கண்ணு முடியும்? நாங்க ஏழைகள். அது ரொம்ப ரொம்பப் பெரிய தொகை. இரண்டாயிரம் ரூபாவாம். அத்தனை பணம் அப்பாகிட்ட இல்லையே" என விளக்கினாள் அன்னை. "ஓகோ அப்படியா! ...த்லொ! த்லொ! புரிந்த பாணியில் யோசித்தாள் சாந்தா.

பத்து நிமிடங்கள் ஓடியிருக்கும். "அம்மா!... அம்மா! அம்மா! நான் ஒரு வழி சொல்லவா?... மாதாவிடம் நமது கஷ்டத்தைச் சொல்லிவிடலாமே? அப்படித்தான் சிஸ்றர் சொல்லியிருக்காங்க. மாதாவிடம் சொன்னால் கட்டாயம் அவ உதவி செய்வாவாமே. நான் ஓடிப்போய் சொல்லிட்டு வாறேனே!" என்று மகிழ்ச்சியோடு கூறிய சாந்தா ஓடினாள் தெருவீதிவழியே. அவள் பாடசாலைக்குச் செல்லும் தெருவீதியில் உள்ள ஒரு சந்தியில் மடு மாதா சுரூபமொன்று அழகுற ஸ்தாபிக்கப்பட்டிருந்தது, மண்டியிட்டாள் அச்சுரூப முன்னிலையில். "மாதாச்சி! அப்பாவுக்குதவி செய்யும். யாரோ ஒருத்தன் அப்பா வைத்த பணத்தைத் திருடிட்டானுமே. ரொம்பப் பெரிய தொகையென்று அம்மா சொன்ன. அப்பா பாவம்!... ஜெயிலுக்கு அனுப்பிடுவாங்க. அப்புறம் நானும், அம்மாவும் என்ன செய்யிறது? மாதாச்சி! நீங்க எப்படியோ அப்பாவுக்கு காசைக் கொடுத்திடுங்க." உருக்கமாக மன்றாடிய

(6-ம் பக்கம் பார்க்கவும்)

## சூடுவது ரோஜாப் பூ மாலை

மடுப்பதிக்குப் புறப்பட்டுவிட்டீர்களா? ஆம்!... மரியன்னைக்கு என்ன கொண்டு போகிறீர்கள்? ரோஜாப் பூமாலைதானே!... ஆம் அவள் விரும்பிச் சூடுவது ரோஜாப் பூமாலைதான். என்ன திகைக்கிறீர்களா?... இந்தக் கடும் கோடைகாலத்தில் ஒரு ரோஜா மொட்டே காணக்கிடைப்பதில்லை. மாலை கட்டப் பூவுக்கு எங்கே போவது? அப்படியும் தேடிக் கட்டிப்போனாலும் மடுப்பதி போய்ச்சேர்வதற்குள் இதழ்கள் உதிர்ந்துவிடுமே!.. என்றுதானே முணுமுணுக்கிறீர்கள்? மலர்களுள் சிறந்தது ரோஜா. மங்கையர் விரும்புவது ரோஜா. ஜெபங்களுள் சிறந்தது பிரியதத்த மந்திரம். மாமரி விரும்புவது அம்மந்திரங்களாலான ஜெபமாலை. எனவேதான் ஜெபமாலைக்கு ரோஜாப் பூமாலை உவமிக்கப்படுகின்றது எப்போதும். இதோ!... உங்கள் முகம் மலர்ந்துவிட்டதே. இப்போது ஏராளமான ரோஜாப் பூ மாலைகளை ஆம் ஜெபமணி மாலைகளை எடுத்துச்செல்ல ஆயத்தமாகிவிட்டீர்களல்லவா?. அவற்றை அன்னை பாதத்தில் உதிர்ந்துபோகாமல் சேர்க்கவேண்டுமல்லவா? இதோ!.. இதைக் கவனியுங்கள்.

பிரான்ஸ் தேசத்தில் மரியன்னையின் யாத்திரை ஸ்தலமொன்றில் ஏராளமான பக்தர்கள் குழுமியிருந்தனர். எல்லோரும் ஜெபமாலைகளை ஓதிக்கொண்டிருந்தனர்; அத்தருணத்தில் அங்கே சமுகம் கொடுத்திருந்த கன்னிகையொருத்தி ஓர் அழகான காட்சியைக் கண்டாள். பக்தர் குழாம் மத்தியிலிருந்து ஒவ்வொரு பிரியதத்த மந்திரமும் ஜெபிக்கப்படுகையில் ஒவ்வோர் ரோஜாப்பூ உயர எழும்பிக் கொண்டிருந்தது. இலட்சக்கணக்கான ரோஜாப் பூக்கள் மேலே மேலே போய்க் கொண்டிருந்தன. இடைவழியில் எல்லா மலர்களின் இதழ்களும் உதிர்ந்து திரும்பவும் பூமியிலேயே விழுந்துகொண்டிருந்தன. கன்னிகை இன்னமும் பார்த்துக்கொண்டிருந்தாள், ஓர் ஏழைச் சிறுமியின் வாயிலிருந்து புறப்பட்ட மலர்கள் மட்டும் இதழ்கள் உதிராமல் மேலே மேலே உயர எழுந்து மரியன்னையின் பாதாரவிந்தத்தில் போய்த் தங்கின. கன்னிகை அதிசயித்தாள். அப்போது அவள் ஒரு குரலொலியைக் கேட்டாள். "இத்தனை ஜனங்களும் ஜெபமாலை மணிகளை ஓதுகின்றார்கள். ஆனால் அவர்கள் அவற்றைத் தியானிப்பதில்லை. பயபக்தியுடன் ஓதுவதில்லை. வாய்ப்பாடமாக, ஜெபமாலையை ஓதிமுடித்துவிடவேண்டுமென்று ஓதுகின்றார்கள். உதடுகள் ஜெபிக்கின்றன. உள்ளமோ வேறு எண்ணங்களில் ஈடுபட்டிருக்கின்றது; அந்த ஏழைச் சிறுமிமட்டும் இதய பூர்வமான பயபக்தியுடன் தனது மணிமாலையை ஓதுகின்றாள். எனவே அவள் அனுப்பும் ரோஜாமலர் மாலையையே நான் விரும்பிச் சூடுகின்றேன்" என்பதுதான் அக்குரலொலி.

நேயர்களே! இந்த உண்மைச் சம்பவம் ஜெபமாலையை நாம் பயபக்தியாக ஓதுவதற்கு எம்மைத் தூண்டும் ஒரு சாதனமாக இருக்கக்கடவதாக.

### பரலோக பூலோக அரசியே!... வாழ்க!

(நான்மணிக்கடிகை)

உந்நத பிதாவின் சேயே!
உகந்தநற் சுதனின் தாயே!
தூய ஆவியின் நேயே!
பாவிகளெமக்குந் தாயே!...
—வாழ்க!... வாழ்க!

* * *

அருள்நிறை பூரண மரியே!
அலங்கிர்த சோபன உருவே!
எழிலுறு விண்ணவர் புகழே!
அவலட்சணபசாசுகள்பயமே!
—வாழ்க! வாழ்க!

* * *

பரலோக பூலோக அரசியே!
பண்பாடும் வான்தூதர்
எழிலே!
கன்னியர் கற்புக் கரசியே!
கவலைகள் தீர்க்கும் தருவே!
—வாழ்க! வாழ்க!

## மருதமடுத் திருப்பதியில்!

(ஓராயிரம் பார்வையிலே!...... எ. மெ.)

மருதமடுத் திருப்பதியில்... மாமரித் தாயைப்
புகழ்வோம்!......
திருவின் உருவாய்த் திகழும்...... தெய்வ அரசியைத்
தொழுவோம்!......

மருதச் சோலையினூடே — அடர்
மராமரக் காட்டினூடே
கரடி புலிக் குகையூடே — கொடும்
கலாபனை நாட்களி னூடே
அன்று அடியாரைக் காத்ததுபோலே
இன்று எம்மையும் ஆண்டிடு தாயே! (மருதமடு.)

* * *

ஈழநாட்டின் திருவாய்— நிறைந்
திலங்கிடும் எழில்மிகு உருவாய்
மழலைக் குழந்தையும் இனிதாய் — மனம்
மகிழ்ந்தே அழைத்திடுந் தாயாய்
இங்கு விளைந்திடு இடரைத் தீர்ப்பாய்
எங்கள் விடிவிளக்காகவே உதிப்பாய்! (மருதமடு.)

* * *

அன்னையென்றழைப்பதும் யாரை?—இங்கு
ஆதரவென்பதும் எவரை?
தந்தையாய் நோக்குவோம் யாரை — நாம்
தஞ்சமென்றடைவதும் எவரை?
அன்னையுன் நிழல்தான் எமக்கு
என்றும் இன்பமே தந்திடுந் தாயே! (மருதமடு.)

* * *

கருணைக் கண்ணால் நோக்கி — எங்கள்
கண்ணீர் துடைத்திடு தாயே!
இருளின் பவவினை ஓட்டா — நிறை
ஒளியை வீசிடு தாயே!
இந்த உலகில் எமக்கொரு துணையாய்
என்றும் இருந்தே அணைத்திடு தாயே! (மருதமடு.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செபமாலையின் விளைவு

நெப்போலியன் பிராஞ்சு தேசத்து சக்கரவர்த்தி ஓர் கத்தோலிக்கன். ஆனால், தனக்கு எய்துற்ற அதிகாரச் செருக்கால் தலைதடுமாறி மதக்கடமைகளை மறந்தான் திருமறைச் சட்டங்களுக்கு விரோதமாகவும் செயல்கள் புரிந்தான். ஒரு நாள் இந்த நெப்போலியன் நாடகம் பார்க்கப் பேர்போன நாடகசாலைக்குப் போனான். தனது வழக்கம்போல் தன்னுடன் ஓர் துணைவனை அழைத்துச் சென்றான். நாடகம் ஆரம்பமாயிற்று? குழுமியிருந்தவர்கள் நாடகச் சுவையால் ஈர்க்கப்பட்டு அதன் மேலேயே கவனமாயிருந்தனர். ஆனால், ஓர் இளவல், நெப்போலியனுக்குத் துணையாகச் சென்றிருந்தவன், சக்கரவர்த்தியின் பக்கத்தில் வீற்றிருந்தான்: நாடகத்தின்மட்டு ஆர்வமற்றவன் போல் தலைகுனிந்தவண்ணமிருந்தான். அவனது வலது கரம் சட்டைப்பையினுள் இருந்தது. இதை நெப்போலியன் பார்த்தான். திடீரென்று தனது கையை இளவலின் சட்டைப்பையினுள் நுழைத்தான். அங்கே வாலிபன்கரத்தில் செபமாலை

இச்சமயத்தில் இளவல், தன்னை ஒன்றில் பேசுவான் அல்லது நையாண்டி பண்ணுவான் நெப்போலியன் என்று எதிர்பார்த்தான். நெப்போலியனோ புன்னகை பூத்தமுகத்தோடு அவனை உற்றுப் பார்த்துக் கூறுவான். "ராவுல்—(அதுதான் இளவலின் பெயர்)—நான் உன்னைக் கையுமெய்யுமாகப் பிடித்துக்கொண்டேன். அதனிமித்தம் நீ கவலைப்பட வேண்டியதில்லை. உனக்கு இடுக்கண் ஒன்றும் ஏற்படாது: உனது செய்கை எனக்கு சந்தோஷமளித்துள்ளது" நீ ஒரு நாள் பிராஞ்சு நாட்டு மேதையாவாய் என்று கூறிவிட்டு செபமாலையை அவனிடம் திருப்பிக் கொடுத்து "உன் வழக்கம் போல் செபமாலை செபிப்பாயாக: நான் குறுக்கே நிற்க மாட்டேன்" என்று உரைத்தான் நெப்போலியன்;

அந்த இளவல் சிலவாண்டுகள் கடந்தபின் பரீஸ் நகர் அதிமேற்றிராணியராக விளங்கினார்.

## மாதாவிடம் சொல்வதுதானே!

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறுமி தன் பக்கத்தில் ஒரு மனித உருவம் தன் மழலைமொழியைக் கேட்டுச் சென்றதைக் காணவேயில்லை. நிம்மதியாக வீடு திரும்பினாள் சாந்தா. "அம்மா!... எல்லாம் மாதாவிடம் சொல்லியிருக்கேன். அப்புறம் மாதா பணம் அனுப்பி வைப்பா தானே. அழாதேயுங்க" என்று கூறினாள் மகிழ்ச்சியாக. உண்டாள், உறங்கினாள், அடுத்தநாள் காலையில் எழுந்து பாடசாலைக்குப் புறப்பட்டாள். ஆனால், அப்பாவும் அம்மாவும் உண்ணவில்லை, உறங்கவில்லை. இரவெல்லாம் சோகக்கடலிலேயே மூழ்கியிருந்தனர். காலையில் கவலையே உருவாய் ஆபீஸ் நோக்கிப் புறப்பட்டான் பாஸ்கர். என்ன நேருமோ!... என்ற அச்சத்துடன் விடைதந்தாள் மனைவி மல்லிகா. ஆயின் சாந்தாவோ "அப்பா!... நான் போகிற வழியில் இன்னொரு தடவை மாதாவிடம் சொல்லிவிட்டுப் போறேனே. மாதா மறந்து போயிருந்தாலும் நினைப்பூட்டி விட்டுப் போறேனே!... என்று கள்ளங்கபடற்ற குரலில் கூறிவிட்டுச் சென்றாள். "ஆமாம்!... மாதா ஆபீஸுக்குப் பணம் அனுப்பி வைக்கப் போறாவாம் பாரு மல்லிகா?" என மனைவியைப் பார்த்துக் கேலியாகக் கூறிக்கொண்டே காரியாலயம் நோக்கினான் பாஸ்கர்.

கவலையே உருவாய் காரியாலயத்தில் தன் மேசையில் அமர்ந்த பாஸ்கர் அன்று தான் பார்வையிடவேண்டிய காகிதங்களைப் பார்த்துக் கொண்டே போனான். இடையே தனது பெயருக்கு விலாசமிட்ட உறையொன்று அக்காகிதங்களின் நடுவே செருகப்பட்டிருப்பதை அவதானித்தான். ஆவலோடு அவசரமாக அதைத் திறந்தான். உள்ளே அத்தனையும் ரூபா நோட்டுக் கற்றைகள். எண்ணினான். இரண்டாயிரம் ரூபாய்கள். கூடவே ஒரு கடிதம் அச்சிடப்பட்டு வைக்கப்பட்டிருந்தது. அன்புள்ள பாஸ்கர்!... தயவுசெய்து என்னை மன்னிக்க வேண்டுகின்றேன். சில்லறைக் கடன்கள் சில நெருக்கியதாலும், நகைப்பித்துக் கொண்ட என் மனைவியின் ஆவலைத் தீர்க்க எண்ணியதாலும், உமது மேசைலாச்சியில் இருந்த இப்பணத்தைக் கையாடி உமக்கு அதிக கஷ்டம் தந்துவிட்டேன். அப்பணத்தை உபயோகப்படுத்த எடுத்துச் சென்ற சமயம் மாதா முன்னிலையில் உமது குழந்தை செய்த உருக்கமான வேண்டுதல் உமக்கும், உமது குடும்பத்துக்கும் நேரவிருந்த கஷ்டத்தை நான் உணரச்செய்து என் மனச்சாட்சியைக் குத்திக் கிளறிவிட்டது. தயவுசெய்து என்னை மன்னித்து இப்பணத்தை ஏற்றுக் கொள்க. நன்றி... இங்ஙனம் உண்மை விளம்பி. அதிசயித்தார் பாஸ்கர். எழுதியவர் யாரென்று அறிய முடியவில்லை. அந்தக் காரியாலய மண்டபத்தில் வேலைசெய்யும் நூற்றுக்கணக்கான உத்தியோகஸ்தர்கள், பியூன்களில் யாராவது ஒருவராயிருக்கும். யாராயிருந்தால் என்ன?... பணம் கைக்கு வந்துவிட்டது. குழந்தை சாந்தா சொன்னதுபோல பணம் கிடைத்துவிட்டது. முதலாளியிடம் ஒப்படைத்து நிம்மதியானான். வீடு திரும்பினான். வழியிலே மாதா சொரூபத்தின்முன் மண்டியிட்டு நன்றி கூறினான் வீட்டையடைந்ததும் மாதா செய்த கருணையை மல்லிகாவுக்கு வியந்து கூறினான்.

மாலை நான்குமணி. வீடு நோக்கி ஓடிவந்த சாந்தாவை ஆவலோடு தூக்கி முத்தமீந்தான். "மாதா பணம் அனுப்பி வைச்சா சாந்தா!... அப்பா ஜெயிலுக்குப் போகமாட்டேன். நேற்று ரொம்பக் கோபமாக உன்னை அடிச்சிட்டேனே' என்று அவளை மார்போடு அரவணைத்தான். "அப்போ மாதாவுக்குத் 'தாங்ஸ்' சொல்லணுமே." அப்பாவின் லககளில் இருந்து விடுபட்டு மாதா சொரூபத்தை நோக்கி ஓடும் சாந்தாவை அன்பு கனியப் பார்த்தனர் அவள் பெற்றோர்.

## அர்ச். வின்சென்ற் டி போல் தருமசபை

(முன் தொடர்ச்சி)

இந்த அதிசயமான சபையானது உலகத்துக்குச் செய்துவரும் நன்மைகளுக்கோ கணக்கில்லை.

ஓர் ஆலம் விதையைப் போல் இச்சபை மிகச்சிறிய தொடக்கத்தைக் கொண்டிருந்தாலும் காலகதியில் உலகம் முழுவதும் பரந்து ஏழைகளுக்கும் தமது ஏககதியை மறந்து இரட்சணிய பாதையில் வழி தப்பிநடக்கும் நிர்ப்பாக்கியர்களுக்கும் இச்சபை செய்து



கொண்டுவந்த, செய்துகொண்டு வரும் நன்மைகளோ அளப்பில.

(a) உலகத்தின் சகல பட்டணங்களில் உள்ள வறிய எல்லோராலும் கைநெகிழப்பட்ட சனங்களை இதன் அங்கத்தவர் வாராந்தம் சந்தித்து சரீர உதவியாகிய ஊண், உடை, இல்லிடம் முதலியவைகளைக் கொடுத்துதவுவது மாத்திரமல்ல தங்களுடைய சமயோசித புத்திமதிகளாலும் ஆறுதல் வார்த்தைகளாலும் இதந் நிர்ப்பாக்கியருடைய வாழ்க்கையில் ஒரு புதிய திருப்பத்தைக் கொடுத்து, சீவிய விருப்பையும் நம்பிக்கையையும் அவர்கள் உள்ளங்களில் புகுத்திவிடுகிறார்கள்.

(b) எத்தனையோ தரும வைத்தியசாலைகள், வயோதிபர்சாலைகள், சீர்திருத்த பாடசாலைகள், அனாதபிள்ளைகள் மடங்கள், பாடசாலைகள் முதலியவைகளை ஸ்தாபித்துத் தமது சொந்த முயற்சியால் இவைகளை ஒழுங்காய் நடப்பித்து நமது பரிசுத்த மாதா பிரிய திருச்சபைக்கும், அரசாங்கத்துக்கும் பொதுவிலே துன்பப்படும் சனசமூகத்துக்கும் எவ்வளவோ ஆறுதலாயிருந்து வருகிறார்கள்,

(c) எத்தனையோ இடங்களில் (Servant's agencies) வேலை தேடிக்கொடுக்கும் ஸ்தாபனங்களை ஸ்தாபித்து மிக அனுகூலமாய் நடத்தி வருகிறார்கள். இவர்கள் வேலை ஆட்களைத் தேவைப்படுவோருடன் தொடர்புவைத்து, வேலை செய்யக்கூடிய சுகபலத்தோடிருக்கும் வறியோருக்கு வேலைதேடிக்கொடுத்து வருகிறார்கள். இந்த முயற்சியால் வறியோர் எப்போதும் மற்றோருடைய உதவியைக் காத்திராமல் தாமே தமது சீவனோபாயத்துக்கு வழியைத்தேடி தமது சுய மரியாதையைக் காப்பாற்றக்கூடியவர்களாய் வந்துவிடுகிறார்கள்.

(d) எத்தனையோ இடங்களில் (Secratariate for the Poor) ஏழைகளுக்கு ஆலோசனை கொடுக்கும் ஸ்தாபனங்களை ஸ்தாபித்து வெகு அனுகூலமாய் நடாத்திவருகிறார்கள். இந்த ஸ்தாபனங்களில் பல வயித்தியர்கள், சட்ட நிபுணர்கள் பெருங் கல்விமான்கள், நீதிபதிகள் முதலியோர் அங்கத்தவர்களாயிருந்து சுகாதாரவிஷயங்களில், வழக்கு விஷயங்களில் கச்சேரி சம்பந்தமான விஷயங்களில், வேறும் எத்தனையோ விஷயங்களில் ஏழைகளுக்கு இனமாக ஆலோசனை கொடுத்துவருகிறார்கள். மனுப்பத்திரங்களை எழுதிக் கொடுக்கிறார்கள். வழி நடத்துகிறார்கள்.

(e) எத்தனையோ தொழிற்சாலைகளை ஏற்படுத்தி வேலையற்றிருக்கும் ஏழைகளுக்கு அவரவர் ஆற்றலுக்கும், பலத்துக்கும், வசதிக்கும் தக்கபடி வேலைகளைக் கொடுத்து உதவி செய்துவருகிறார்கள்.

(f) ஏழைகளுக்கு வட்டியில்லாமல் கடன் கொடுத்துதவும் ஸ்தாபனங்களை நடப்பித்துவருகிறார்கள்.

(g) வாலிபரை அணைத்து நல்வழியில் நடத்தும் நோக்கமாய் எத்தனையோ வாலிபர் விளையாட்டுக் கிளப்புகள், யோகாப்பியாசஸ்தாபனங்கள், தேகாப்பியாச ஸ்தாபனங்கள், இலக்கியவளர்ச்சி ஸ்தாபனங்கள், வாசிகசாலைகள் முதலியவற்றை நிறுவித் தமது சொந்தச் செலவில் நடப்பித்து வருகிறார்கள்.

(h) நிலைமையான வருத்தமுள்ள நோயாளர்சாலைகளை நிறுவி, (Home for the incurable) அங்கேயிருப்பவர்கள் பாடுபடும் கிறீஸ்துநாதரோடு சேர்ந்து தமது பாடுகளைச் சந்தோஷமாய், உலக இரட்சணியத்துக்காக அனுபவித்துவரும்படி பயிற்றப்படுகிறார்கள்.

(i) அங்கக்குறைபாடுடையோர் மடங்களை (Home for the dirabled) நிறுவி அங்குள்ளவர்களுக்கு அவர்களால் செய்யக்கூடிய வேலைகளைக் கொடுத்து ஆதரித்து வருகிறார்கள்.

இவைமாத்திரமா, இன்னும் எத்தனையோ விதம்விதமான காரியங்களை ஏழைகளுக்குச் செய்து, "நீங்கள் ஏழைகளுக்கு என்ன செய்கிறீர்கள்?" என்ற திருச்சபையின் சத்துராதிகள் அன்றொருநாள் கூறிய வசைமொழியை இப்போ கூறாதபடி அவர்களின் வாயை அடைத்த பெருமை அர்ச். வின்சென்ற் டிபோல் சபைக்கே உரியது.

இப்பேர்ப்பட்ட ஓர் உன்னத சபையில் கிறிஸ்தவ வாலிபரே ஏன் சேராதிருக்கிறீர்கள்? உங்கள் அறியாமையா அல்லது விசுவாசக் குறைவா இதற்குக் காரணம்? காட்டுத்தீபோல் உலகெங்கணும் பரம்பி அதை விழுங்கிவிடக் கங்கணங்கட்டிநிற்கும் பொதுவுடைமைக்காரரின் நாசவேலையா? அல்லது உங்களை வழிநடத்தவேண்டியவர்களின் பாராகண்டிதமா?

## இன்பமடு எழிலரசி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மருதமடுச் செபமாலைமாதா.

ஆவியொடு காயமழிந்தாலும் மேதினியில் பாவமேபுரியாது அதனை அரோசிக்க சிலுவையிற் குருதிசிந்தி உலகினை இரட்சித்தஉந்தன் அருமைத் திருமகனை வாழ்வினில் என்றும் மறவாது அவரை அன்புடன் எண்ணிச் சீவிக்க இறைவன் திருவடிகளைத் தினமும் நினைந்து உடல், பொருள், ஆவியை அவருக்கே அர்ப்பணம் செய்து பூசிக்க அருள் புரிந்தருளுவீர் தாயேஎன்று இரந்துநிற்கும் பக்தர்களின் உருக்கமான செபங்களை இரக்கமுடன் கேட்டு இன்னருள் புரிந்துவருகின்றார் மருதமடு அருள்மாதா.

வனமே அரும்பும் மலர்களைத் தூற்றித் தினமும் நினைந்து உன்பதம் போற்றி, மனமேல் உந்தன் உருவமே ஏற்றி வணங்கும் அன்பர் துதியைஏற்று உந்தன் அருமைத் திருமகனை இரந்து ஞானமும் சமாதானமும் அருளுவீர் என்று இரந்து கேட்கும்செபங்களைக்கருணையுடன் கேட்டு அருள்புரிந்து வருகின்றார் சமாதானத்தின் இராக்கினி.

உலகமே உய்ய வழிசெய்த அன்னையின் உருக்கமான வேண்டுகோளை மருதமடுவிலும் பக்தர்கள் மனதிருத்திச் செபமாலையைப் பயபக்தியுடன் செபிப்பதையும் பாவிகள் மனந்திரும்ப மன்றாடுங்தையும், ஒறுத்தல் உபவாசவகளைப் புரிவதையும், மாதாவின் மாசில்லாத இருதயத்திற்கு மக்கள் தம்மை அர்ப்பணிப்பதையும் மனமுவந்து நோக்கி அருள்புரிகின்றார் இன்பமடு எழிலரசி.

அனைத்துலக மக்களின் இராக்கினி, அருட் கிருபை நிறைந்த மாதா, ஆருயிரும் தஞ்சமும் மதுரமுமான தாய் இக்கண்ணீர் கணவாயிலிருந்து துயருறும் பரதேசிகளும் பாவிகளுமான மக்களை வானுலகிலிருந்து திருக்கண்ணோக்கிப் பார்க்கிறார். பேய், உலகம்,! சரீரம் என்னும் பெருந் தீங்கிழைக்கும் சத்துருக்களில் நின்றும் காப்பாற்ற, ஆபத்துவேளையில் ஆருதவி புரிய, அச்சமின்றி அமைதியுடன் வாழ அருள்புரிவார். பூமியாம் பேழையில் இருந்து பெருமூச்சுவிடும் ஏழையாம் பாவிகளின் கூக்குரலைக் கேட்டுத் தமது திருக்குமாரனிடம் இரந்து நித்திய சீவியம்தர அருள் புரிவார்.

ஆருயிர்த்தாயே! உன்துணையின்றி யார் உயிர்பெறுவார்? யார் அருள்பெறுவார்? யார் கரைசேருவார்? என்று அவரது ஆலயந் தேடி, உதவி நாடி நம்பிக்கையுடனே பொங்கும் அன்புடன் இங்கிதம் புகழ் மங்களம்சொல்ல வந்திருக்கும் பல்லாயிரக் கணக்கான பக்தர்களையும் கருணைத் திருவிழிகளால் நோக்கித் தமது திருக்குமாரனை வேண்டி அன்புநிறைந்த ஆசியை அனைவர்க்கும் இரந்தருளுவார்.

தேவைகள் தருவது காவலன்; சேவைகள் மிகுவது காவலன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**யாழ். ஆசனக் கோவில்**

# அன்னை அமலியின் ஆரோபணைத் திருவிழா

இன்று யாழ். ஆசனக் கோவில் பங்கைச் சேர்ந்த மக்களுக்குப் பேருவகை பொங்கும் பெருநாள். இதயம் பூரிக்கும் இன்பநாள். இன்றுதான் யாழ்நகரின் பாதுகாவலாளியான அமலியின் அன்புத் திருநாள் — ஆரோபணைத் திருநாள். ஆவணித் திங்களிலே அன்புக்கரசியாம் அன்னைக்கு எடுக்கும் அலங்கார விழா.

இந்நாளை ஆசனக்கோவில் மக்கள் எப்படிக் கொண்டாடுகிறார்கள்? அவர்கள் அன்னையின் நாளை வெகு பக்திச்சிறப்பாக, வீண் ஆடம்பரங்களையும் செலவுகளையும் நீக்கி ஏனைய பங்கு மக்களுக்கு எடுத்துக்காட்டாக, முன்னேடியாக



கொண்டாடுகிறார்கள். அன்னையின் அருள் இவர்களிடம் நிரம்ப உண்டு என்பதற்கு இவர்கள் ஆயத்த நவதினங்களைக் கொண்டாடும் விதம் மற்றோரைச் சிந்திக்கவைக்கிறது.

சிலர் மேளமின்றி, வாணமின்றித் திருவிழாவா? என்று அங்கலாய்த்தனர். அவர்கட்கெல்லாம் சவால் விடுவது போன்று, வாருங்கள், நாங்கள் எப்படித் திருவிழாவைப் பக்தியருட்சியுடன் கொண்டாடுகிறோம் என்பதைப் பாருங்கள் என்பதுபோல் அமைந்தது. அன்னையின் "செபம், தபம்" என்ற வேண்டுகோள் சிறப்புடன் நடைபெறுகிறதைக் கண்டார்கள். ஆம், இந் நவநாட்கள் திருப்பலியுடன் ஆரம்பமாகிறது. பங்கு மக்கள் அனைவரும் குடும்பங்களாகச் சேர்ந்து திருப்பலியில் பங்குகொண்டு, திருவிருந்திலும் பங்குகொள்ளுகிறார்கள். பின்னர் அன்னையின் செபமாலை ஓதப்படுகிறது. பிரார்த்தனை பாடப்படுகிறது. அமலியின் செய்தியும், அமலனின் கருத்தோவியங்களும் குரவரால் அழகுத் தமிழில் அமுத நடையில் எடுத்துக் கூறப்படுகிறது. ஈற்றில் நற்கருணைநாதர் பூசை இடம் பெறுகிறது. எல்லா மக்களும் ஒன்றித்து ஒற்றுமையாய் வேற்றுமை களைந்து பக்திப் பரவசத்துடன் செபிப்பது உண்மையிலேயே இதுவரை காலமும் நடைபெற்ற திருவிழாக்களுக்குச் சிகரம் வைத்தாற்போன்று அமைந்துள்ளது.

இப்படியாக இவர்கள் இந் நவநாளில் பங்குகொள்ளுவது இவள் நாளின் சிறப்பம்சத்தையும் உணர்த்துவதாகின்றது. அன்னை அமலி அனைத்துலக அணங்குகளிலே ஆசீர்வதிக்கப்பட்டவள். எந்தப் பெண்களுக்கும் கிடையாத பாக்கியம் பெற்ற பாக்கியவதி. கடவுள் தமது திருக்குமாரனுக்குத் தாயாக ஆக்குவதற்காக ஏற்கெனவே அவளைத் தயார் செய்துவந்தார். மாசின்றி உற்பவிக்கச் செய்தார். முப்போதும் கன்னிகையாகவே காத்துவந்தார். அத்தகைய அன்னை — அமலனின் அன்னை — மாதர்குல மாதரசி மரித்த மூன்றும்நாள் ஆத்தும சரீரத்தோடு விண்ணுலகுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டாள். அவள் தூய சரீரத்தை மண்ணுக்கு இரையாக்கவில்லை. விண்ணுக்கு விரைந்து எடுத்தார். விண்ணுக்கும் மண்ணுக்கும் அரசியாக விளங்க வைத்தார். அந்தப் பொன்னுள்தான் இந்த ஆவணித் திங்கள் பதினைந்தாம் நாளிலே கொண்டாடப்படுகிறது.

அவள் எமக்கு அன்னையாக மட்டுமல்ல, அரசியாகவும் விளங்குகிறாள். பூவுலகில் அன்னையாக வந்து அரவணைத்து வழிநடத்துகிறாள். அவள்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# வனத்தில் வாழும் வானக அரசி

மனிதன் அவனியை அடிமைகொண்டு அம்புலியை ஆட்சிகொள்ளப் புறப்பட்ட போதிலும் அவனால் துன்பத்தை வெற்றிகொள்ள முடியவில்லை. மனிதன் பிறப்பதும் அலகையுடன். அதுதான் துன்பத்தின் முதல்படி. அன்று தொட்டு மரணம் அவனை அண்டும் வரை அவன் வாழ்க்கை துன்பம் சூழ்ந்ததாகவே இருக்கின்றது. நிலையற்ற இன்பங்கள் பல வழிகளில் அவனை ஆட்டிப் படைத்து மீளாத்துயரில் அவனை மூழ்கடித்துவிடுகின்றன. அம்மா! அது தான் பிறந்தவொரு மழலையின் முதல்வார்த்தை. இன்னல் விளைந்தபொழுது மனிதன் வாயிலிருந்து வெளிப்படுவதும் அம்மா எனும் சொல்லே.

அன்னை என்றால் அன்பிற்கு எல்லை என்பர் அறிஞர். பத்துமாதம் சுமந்து பெற்ற அன்னை காலச் சூழலில் சிக்கி மறைந்து விடுவாள். ஆனால் ஓர் அன்னை, அழியாத பேரன்னை, அவளே மரியன்னை. இவ்வன்னை நமது நம்பிக்கையின் அடித்தளம். சாத்தானின் சோதனைகளில் நம்மைக் காப்பாற்றும் வைரக் கேடயம். வழி தவறித் திரியும் மந்தைகள் நம்மைப் பரகதிக்கு இட்டுச் செல்லும் ஒளி விளக்கு. அம்புலி ஆதவனின் ஒளி பெற்று இந்நிலத்திற்கு அளிப்பது போல் தேவதாய் தன் மைந்தன் கிறிஸ்துவிடமிருந்து அருள் பெற்று நமக்களிக்கிறாள். மனுக்குலமக்கள் அனைவரதும் ஈடேற்றத்துக்கென மகனிடம் இறைஞ்சுவதே அவள் பணி.

இப்படிப்பட்ட அருளன்னை மருதமடுமாதா எனும் நாமத்தில் காரிருள் ஒளிர்ந்திடும் கோலநிலவெனக் கானக இருளிடை ஒளிரும் மடுத்திருப்பதியிலே அன்பர் துன்பம் துடைத்து உள்ளம் குளிர்வித்து உவகையூட்ட எழுந்தருளியுள்ளாள்.

ஈழத்து கத்தோலிக்கத் திருத்தலங்களின் நடுநாயகமாக விளங்கும் மடுத்திருப்பதி அமைப்பு தன்னில் தனிச்சிறப்பு மிக்கது. சுற்றிநிற்கும் அடர்ந்த கானகமும் அதனில் வதியும் கொடிய விலங்குகளும் அவற்றின் நடுவே உயர்ந்து நிற்கும் மரியன்னையின் தேவாலயமும் கொடியவரின் கல்மனத்தை உருக்கும் ஒளியென தேவதாய் உள்ளாள் என்பதனையும் கூறுமற் கூறுவதுபோல் அமைந்துள்ளன. ஈழத்திருநாட்டில் மருதமடு அன்னை இத்தனை சிறப்பெய்தியுள்ளதற்குக் காரணம், கண்களில் கண்ணீர் வழிய உன்னையன்றி வேறு தஞ்சம் எனக்கிலர் என அபயம் கோரி ஓடிவரும் அடியவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் ஒரு அன்னையின் இருப்பிடமாக அது இருப்பதே.

அங்கையிலே மணிமாலை தாங்கி சிரமதில் மின்னொளிரும் சிங்கார முடிபுனைந்து காமதில் பாவத்தனையறுக்கப் பாரிற் பாலகனாய்ப் பிறந்த பரம் பொருளை ஏந்தி நிற்கும் திருக்கோலமே மருதமடு அன்னையின் அருள் வடிவம்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

# அவளல்லவோ தாய்!

சிலுவையின் வேதனையிலே மீட்பின் சாதனைகாட்டிய வேளையிலே, துன்பத்தின் சூழலிலே உதிரம்சிந்தி உலகைமீட்ட உச்சக்கட்டத்திலே பாவிகளைப் பாசத்துடன் காக்க அன்பினை அள்ளி ஊட்ட அமலனின் அன்னை அகிலத்தோர் மாதாவாக்கப் பட்டாள்.

கானூவூர் விருந்திலே கலக்கம் தீர்த்து, கருணைபுரிந்து அன்புள்ளங்கொண்ட அமலனின் அன்னை அபலைகளுக்கு ஆதரவு அளிக்க தாய் என்னும் மேன்மையால் சேயர் எமைக்காக்க மருதமடுப் பதியிலே மாசின்றி எழுந்து மாண்புற விளங்குகின்றாள்: விசும்பினில் விளங்கும் வெண்மதி போன்று தண்ணொளி பரப்பும் அவள்மதி வதனம் நோக்கி வாட்டம் நீக்கிச் செல்வோர் எத்தனை பேர். செங்கமலபாதங்கள் சிரம் பணிந்து சிறப்புடன் தொழுது சிந்தை குளிரச் செல்வோர் எத்தனை பேர். அண்டிவந்தவர்களுக்கு அள்ளிக் கொடுத்து, அஞ்சியவர்க்குத் தஞ்சம் அளித்து, வீழ்ந்தவர்க்குத் தன்வலக் கரம் நீட்டி, தவித்தோர் தடாகமாக அன்புக் களஞ்சியமாக இந்நிலத்தில் இலங்குகிறாள் இணையிலா மாதரசி.

இவ் ஆவணித் திங்களில் அடியார் எல்லாம் அலைகடலாய்த் திரண்டு அன்னையின் அடிகள் போற்றி அல்லல் அகன்று அகமிகமகிழ்ந்து ஆரவாரிப்போம்: அத்தாய் ஆபத்தில் ஆன்மாக்களைக் காத்து ஆட்சி புரிந்து வருகிறாள். வையகமெங்கனும் அவள் வான்புகழ் பாடட்டும்.

* * *

விடவரவம் விளங்கும்
களிறுடன் கரடி இலங்கும்
கடுமைமிக்க கானகத்தில்
கருணையின் வடிவில்
காருண்ய உருவில்
அன்பின் பெருக்கால்
அருளின் கொடையால்
மாமறு போக்க மன்றாட்டம் கேட்க
மாண்புற எழுந்தாள்.

—லிகோரி

## செபமாலைத் தாயார்

கானமடுப் பதிதேடிக் காற்றுகிச் சென்றேன்
கனல்வழியின் பதைபதைப்புக் களைப்பாறி நின்றேன்
தேனருவி மழைபொழியும் திருவிழிகள் கண்டேன்
தெவிட்டாத பேரின்பச் சுவையமுத முண்டேன்

* * *

ஞானமணித் திருமாலை மிளிர்கின்ற கரமும்
நவரத்ன முடிமின்னி ஒளிர்கின்ற சிரமும்
வானமணித் தாரகைப்புன் னகைமுத்துச் சரமும்
வாயாரக் கவிபாடி வர்ணிக்குந் தரமோ?

* * *

கன்னிமைக்கற் பழியாத கட்டழகி யன்னாள்
கமலமலர்த் தாளிணைகள் காந்திமணிப் பொன்னோ?
வன்னமுறுங் கதிர்வேய்ந்து எழில்பொங்கும் அங்கம்
வல்லபர ஞர்கையில் வனப்புற்ற தங்கம்:

* * *

கோடானு கோடியடி யார்வாழ்த்தும் ஒலியே
குமுறியெழுந் தலைபாய்ந்து குதிக்கின்ற கலியோ?
வாடாத சிம்மாச னங்கொண்டன் பாயோர்
வனராணி யாகினாள் செபமாலைத் தாயார்.

யாழ் — "ஜெயம்"

மறைப்பணி புரிவது காவலன்; சிறப்புரை வழங்குவது காவலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய திருப்பலி முறை

— சங். சகோ. அன்ரன் மத்தியாஸ் —

இவ்வருடம் சித்திரை 28-ம் திகதி பரிசுத்த பாப்பரசர் புதிய கர்தினல்மார்களை நியமித்தநாளன்று புதிய திருப்பலி முறையை (Ordo Missal) வெளியிட்டார். பூசைப்பலியே திருவழிபாட்டின் சிகரமும், மையமுமாயிருக்கின்றது. ஆகையால், இறைமக்கள் மிகச் சிறந்த வழியில் இப்பலியை இறைவனுக்கு ஒப்புக்கொடுப்பதற்கு ஏதுவாகப் பூசைப்பலியின் சடங்குகளிலே பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அருளப்ப பாப்பரசர் வத்திக்கான் சங்கத்தை நடத்தத் தீர்மானித்த நாட்தொடக்கம் திருவழிபாட்டுக் குழுவினர் திருவழிபாட்டைத் தற்கால மனிதனுக்கு ஏற்றதாக்கும் பணியில் ஈடுபட்டனர். சங்கத் தந்தையினர் முதன்முதலாக இக்குழுவினரால் தயாரிக்கப்பட்டவற்றையே எடுத்து ஆராய்ந்தனர். எனவே, அவர்களுடைய அயரா உழைப்பின் பயனாகத்தான் திருவழிபாட்டுக் கொள்கைத் திரட்டு உருவாகியது என்று சொல்லலாம். சங்கத்தந்தையர் ஆசித்தது போலத் திருவழிபாட்டில் வேண்டிய திருத்தங்களையும், மாற்றங்களையும் செய்வதற்கெனப் பாப்பரசர் கர்தினல் லேர்காரோவைத் தலைமையாகக்கொண்ட ஒரு குழுவை நியமித்தார். இக்குழு வெவ்வேறு நாடுகளின் திருவழிபாட்டுக் குழுவினரின் உதவியோடு இப்பணியைச் சிறப்பாகச் செய்துள்ளது. இப்பொழுது பாப்பரசரால் வெளியிடப்பட்ட திருப்பலிமுறை அவர்களின் அயரா உழைப்பிற்குச் சான்று பகருகின்றது. இத்திருப்பலி முறையின்படி பூசைப்பலியில் ஏற்பட்டுள்ள முக்கிய மாற்றங்கள் எவையென்று இப்போது சிறிது ஆராய்வோம்.

பூசைப்பலி வார்த்தையின் வழிபாடு, நற்கருணை வழிபாடென இரு பிரதான பாகங்களைக் கொண்டுள்ளது. இதை ஆரம்பச்சடங்குகள், திருவாசகங்கள், காணிக்கை, நற்கருணை வேண்டுதல், திருவிருந்து, முடிவுச் சடங்கு என மேலும் சிறு பாகங்களாகப் பிரிக்கலாம்.

## ஆரம்பச் சடங்குகள்

வார்த்தையின் வழிபாட்டிற்கு முன்வரும் சடங்குகளை இவ்வாறு அழைக்கின்றோம். வருகைப்பாடல், அஞ்சலி, பச்சாத்தாப முயற்சி, வானவர் கீதம், சபை மன்றாட்டு என்பவை இப்பகுதியில இடம் பெறும். மக்களை ஒருமைப்படுத்தி, அவர்கள் சரியாகக் கடவுளின் வார்த்தையைக் கேட்கவும், தகுந்த விதமாக நற்கருணை வழிபாட்டில் பங்கு பெறவும் அவர்களைத் தயாரிப்பதே இச்சடங்குகளின் நோக்கமாகும்.

**வருகைப்பாடல்:** குரு பீடத்திற்கு வரும்பொழுது ப்பாடல பாடப்படும். இதன் வழியாக மக்கள் ஒருமைப்படுத்தப்படுகின்றனர். அத்துடன் அன்றைய வழிபாட்டில நினைவு கூரப்படும் மறையுண்மையும் அவர்களுக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றது. இவ்வாறு வருகைப்பாடல் பூசைப்பலியைத் தொடக்கி வைக்கின்றது. குரு பீடத்திற்கு வந்தவுடன் அதை முத்திசெய்து வணக்கம் செலுத்துவார். சில சந்தர்ப்பங்களில் அதற்குத் தூபமும் காட்டுவார். பின் அவர் தமது ஆசனத்திற்குச் சென்று சிலுவை அடையாளம் வரைந்து கொள்வார்.

அஞ்சலி: பின் அவர் மக்களுக்கு வந்தனை செய்வார். இதற்குப் புனித சின்னப்பர் தமது நிருபங்களில் பயன்படுத்தியுள்ள வாழ்த்துரைகளுள் ஒன்றை, அல்லது இப்பொழுது பூசையில் பயன்படுத்தப்படும், "ஆண்டவர் உங்களோடு இருப்பாராக" என்னும் வாழ்த்துரையை, அல்லது தேசிய ஆயர் குழுவினல் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு வாழ்த்துரையைப் பயன்படுத்தலாம், எடுத்துக்காட்டாக.

**குரு:** "நம் ஆண்டவராகிய யேசுக்கிறிஸ்துவின் அருளும், கடவுளின் அன்பும், பரிசுத்த ஆவியில் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக."

**மக்கள்:** "நம் ஆண்டவர் யேசுக்கிறிஸ்துவின் தந்தையாகிய கடவுள் போற்றி."

அல்லது,

**குரு:** "நம் தந்தையாகிய கடவுளிடமிருந்தும், ஆண்டவராகிய யேசுக்கிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு அருளும் அமைதியும் உண்டாவதாக."

**மக்:** "நம் ஆண்டவர் யேசுக்கிறிஸ்துவின் தந்தையாகிய கடவுள் போற்றி."

அல்லது,

**குரு:** "ஆண்டவர் உங்களோடு இருப்பாராக,

**மக்:** "உம்மோடும் இருப்பாராக."

பச்சாத்தாப முயற்சி: எமது காணிக்கை இறைவனுக்கு ஏற்றதாக இருக்க வேண்டுமாகில நாம் தூயஉள்ளம் உடையவர்களாய் இருத்தல் வேண்டும். எனவே, குரு மக்களோடு சேர்ந்து பாவ அறிக்கையிட்டு இறைவனின் மன்னிப்பை இறைஞ்சுவார். இச்சடங்கிலும் பல்வேறு மன்றாட்டுக்களைப் பயன்படுத்தலாம். எடுத்துக்காட்டாக:

(i) **குரு:** "சகோதரரே, திருப்பலி ஒப்புக்கொடுக்க நாம் தகுதி உடையவராகும் பொருட்டு நம் பாவங்களை ஏற்று அறிக்கையிடுவோம்."

**மக்:** "எல்லாம் வல்ல இறைவனிடமும், சகோதரரே உங்களிடமும் நான் பாவியென்று ஏற்றுக்கொள்கிறேன். ஏனெனில, என் சிந்தனையாலும் சொல்லாலும் செயலாலும், என கடமையில் தவறியதாலும் பாவங்கள் பல செய்தேன்: என் பாவமே, என் பாவமே, என்பெரும் பாவமே. ஆகையால், எப்போதும் கன்னியான மரியாளையும், வானதூதர், புனிதர் அனைவரையும், சகோதரரே, உங்களையும் நம் ஆண்டவராகிய இறைவனிடம் எனக்காக வேண்டிக்கொள்ள மன்றாடுகிறேன்"

**குரு:** "எல்லாம் வல்ல இறைவன் நம்மீது இரக்கம் வைத்து நம் பாவங்களை மன்னித்து, நம்மை நித்திய வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக".

**மக்:** "ஆமென்".

(ii) **குரு:** "சகோதரரே, திருப்பலி ஒப்புக்கொடுக்க நாம் தகுதி உடையவராகும் பொருட்டு நம் பாவங்களை ஏற்று அறிக்கையிடுவோம்".

"ஆண்டவரே, எங்கள் மேல் இரக்கமாயிரும்"

**மக்:** "ஏனெனில், உமக்கு எதிராகப் பாவம் செய்தோம்".

**குரு:** ஆண்டவரே, எங்களுக்கு உமது இரக்கத்தைக் காட்டியருளும்".

**மக்:** "உமது மீட்பையும் எங்களுக்குத் தந்தருளும"

**குரு:** "எல்லாம் வல்ல இறைவன் நம்மீது இரக்கம வைத்து நம் பாவங்களை மன்னித்து, நம்மை நித்திய வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக".

**மக்:** "ஆமென்".

(iii) **குரு:** "சகோதரரே, திருப்பலி ஒப்புக்கொடுக்க நாம் தகுதி உடையவராகும் பொருட்டு நம் பாவங்களை ஏற்று அறிக்கையிடுவோம். உளம் நொறுங்கியவர்களைக் குணமாக்கும்படி அனுப்பப்பெற்ற ஆண்டவரே, இரக்கமாயிரும்".

**மக்:** "ஆண்டவரே, இரக்கமாயிரும்".

**குரு:** "பாவிகளை அழைக்கவந்த கிறீஸ்துவே, இரக்கமாயிரும".

**மக்:** கிறீஸ்துவே, இரக்கமாயிரும்.

**குரு:** "தந்தையின் வலப்புறம வீற்றிருந்து எங்களுக்காகப் பரிந்து பேசும் ஆண்டவரே, இரக்கமாயிரும்".

**மக்:** ஆண்டவரே, இரக்கமாயிரும்".

**குரு:** "எல்லாம் வல்ல இறைவன் நம்மீது இரக்கம வைத்து நம்பாவங்களை மன்னித்து, நம்மை நித்திய வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக".

**மக்:** "ஆமென்".

முதல் இரு வேண்டுதல்களில் ஒன்றைப் பயன் படுத்தினால் அத்துடன் பின்வரும் வேண்டுதலும் சொல்லப்படும்.

**குரு:** ஆண்டவரே, இரக்கமாயிரும்.

**மக்:** ஆண்டவரே, இரக்கமாயிரும்.

**குரு:** கிறீஸ்துவே இரக்கமாயிரும்.

**ராக்:** கிறீஸ்துவே, இரக்கமாயிரும்.

**குரு:** ஆண்டவரே, இரக்கமாயிரும்.

**மக்:** ஆண்டவரே, இரக்கமாயிரும்.

இதைத் தொடர்ந்து வானவர் கீதமும், அந்நாளுக்குரிய சபை மன்றாட்டும் சொலலப்படும். இத்துடன் ஆரம்பச் சடங்குகள் முடிவடையும்.


"புதிய சுண்டிக்குளிச் சந்திக்கருகாமையில்"

ஏ. எவ். றேமண்ட்ஸ்,

147, மெயின்வீதி, யாழ்ப்பாணம்.

குறைந்த செலவில் மனம்நிறைந்த

அந்தியசேவை

ரூபா 175/-

உயர்தர பிரேதப்பெட்டிகள் ரூபா 50/-


## வனத்தில் . . .

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்நெஞ்சம் கொண்ட பாவிகளையும் உருகும் பனிமலையென மாற்றிவிடும் அற்புத சக்தி படைத்த இவ்வன்னை எண்ணற்ற வருடங்களாக இவ்வனத்தில் வதிகிறாள். இவளின் இக்கோலத்தினால் இவ்வனமே பெருமை பெற்றுள்ளது. இத்தலமே ஒரு மாபெரும் திருத்தலம், அடைக்கலம் கோரி ஓடிவரும் அடியவர் ஆறுதல் பெற்றுத் திரும்பும் அருட்தலம்.

நிகழும் ஆவணித் திங்கள் 15-ம்நாள் அவள் திருத்தலத்தின் மகிமையை உணரக்கூடிய நன்னாள். எம் ஈழவள நாட்டின் ஒன்பது மாகாணங்களிலுமிருந்து பக்தகோடிகள் கோடிக்கணக்கில் வருகை தந்திருக்கையில் திருவருள் நங்கை மரியன்னை அலங்காரத் தேரேறிப் பவனிவரும் காட்சியை கண்ணாரக்கண்டு, அவள் ஆசிரைப் பெற்று மனநிறைவுடன் திரும்பும் பக்தர்களைப் பார்க்கக் கண்கோடி வேண்டும். இந்நாளில் இப்பதியில் நிகழும் புதுமைகளை எழுத முயன்றால்ஏடுகள்அடங்காது. இந்நாட்களில் அங்கு கிறீஸ்தவர்கள் மட்டுமல்ல இன்னும் அநேக பிறமதத்தினர் அன்னையின் அருட்கடலில் ஆனந்த நீராடி மகிழ்வதைக் காணலாம்.

இவ்வாறாக வனத்தின் நடுவே மீட்புப்பணியில் ஈடுபட்டு பாவிகளைத் தன்னண்டை வரவழைக்கும் பேரன்னையின் புகழை இளைத்துக் களைத்து வருபவர்களுக்கும் களையாறிக் குளிர்ந்த நிழலை அளிக்கும் அருளன்னையின் மாண்பை தஞ்சமென்று வருபவர்களைப்புறக்கணியாது தயவுடன் அவர்கள் விண்ணப்பத்திற்குச் செவி கொடுக்கும் அமல அன்னையின் மாட்சியை பின்னமில்லாமுன்னமேபெற்ற மரியன்னையின் மகிமையைப் பாரெங்கும் பரப்பி அவள் அருளினைக் குன்றா அன்பினைப் பெறுவோமாக.

கனியுட்.

## ஊழல்களை அகற்றுவோம்

கொழும்பு அக்குவைனஸ் சர்வகலாசாலைக் கல்லூரியின் ஆதரவில் நடைபெற்று வரும் புனித பிரான்சிஸ் சவேரியார் சங்கம் நாட்டின் பல பிரமுகர்களான மேல் நாட்டு வைத்தியர், சட்ட நிபுணர், பொறியியல் விற்பன்னர், கல்வித்துறைப் பெரியோர் சமூகத்தொண்டர் பலரை அடக்கியுள்ளது. இச்சபையினர் சென்ற வாரம் நடத்திய மகாநாட்டில் எமது தேசத்தில் மலிந்துகிடக்கும் கை இலஞ்சம் முதலிய ஊழல்கள் அகற்றப்படாவிடில் நீதி மருந்துக்கும் கிட்டாவிடில் அவற்றை உடனடியாக அகற்ற, பல முறைகளையும் ஆராய்ந்துகொண்டனர்; முதன்முதலாகப் பகிரங்க சமூகத் தொடர்புச் சாதனங்களாகிய பத்திரிகைகள், வானொலி, சினிமா முதலியனவற்றின் மூலமாக மக்களை விழிக்கப்பண்ண வேண்டுமெனவும் முடிவு செய்யப்பட்டது. இதற்குப் பிறசமயத்தவருடைய ஆதரவையும் பெற்றுக்கொள்ள வழிவகைகள் ஆராயப்பட்டன.

## அன்னை அமலி . . .

(7ஆம்பக்கத் தொடர்ச்)

மக்களாகிய எம்மைப்பார்த்து; "தாயாகிய எனக்குச் சேயாகிய நீங்களா இப்படிச் செய்கிறீர்கள்?" என்று துயரத்துடனும் பாசத்துடனும்கேட்கிறாள். உலகமானது "அமைதி, அமைதி" என்றும், "சமாதானம், சமாதானம்" என்றும் குரல் எழுப்புகிறது. ஆனால், சமாதானத்தின் இராக்கினியான அன்னையை மறந்துவிட்டது. இப் பெண்ணரசியினால் பெரும் பேற்றை அடைந்த உலகமானது இம் மண்ணரசியை மறந்து வாழ நினைக்கிறது. இம் மண்ணுலகம் இன்னும் அழியாதிருக்கிறது என்றால் இதற்குக் காரணம் மரியன்னைதான். இதனை நாம் சிந்திக்கிறோமா?

அன்னையின் மணி மொழிகளை எம் அணி மொழிகளாகக் கொள்ளுவோம். அன்பு செலுத்துவோம். அனைவரையும் ஆசீர்வதித்திட வேண்டி அவள் பாதத்தில் சரணடைவோம்.

## அன்னையின் . . .

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

மரியாளின் பாப்பு என அழைக்கப்பட்ட பன்னிரண்டாம் பத்திநாத பாப்பிறை 1950-ம் ஆண்டு **மரியன்னை ஆன்மசரீரத்தோடு விண்ணுக்கு உயர்த்தப்பட்டாள்** என்ற சத்தியத்தை பிரகடனம்செய்து கத்தோலிக்கர்கள் அதனை விசுவாச சத்தியமாகக்கொள்ள வேண்டும் என்று ஆணையிட்டார். இந்நிகழ்ச்சி மரியன்னையின் பக்தர்கட்கெல்லாம் மிக்கதோர் மகிழ்வுதரும் செய்தியாக விளங்கியது.

**நாத்திகம் எதிர்ப்பது காவலன்; காத்திரம் உதிர்ப்பது காவலன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணியோசை

— மடோனு —

1950-ம் வருடம். பன்னிரண்டாம் பத்திநாத பாப்பரசர் மரியன்னையின் ஆரோபண அறிக்கையை விசுவாச சத்தியமாகப் பிரகடனம் செய்தார். இதுகேட்டு கத்தோலிக்க உலகு மகிழ்ச்சிக்கடலில் திளைத்தது.

பாப்பரசர் புதியதோர் உண்மையை வெளியிடவில்லை. நூற்றுண்டுகாலமாகக் கத்தோலிக்கரின் உள்ளத்தில ஊன்றியிருந்தவோர் எண்ணத்தையே அவர் அதிகாரபூர்வமாக பகிரங்கப்படுத்திஞர்.

மரியன்னையின் ஆரோபணம் மூந்திய நூற்றுண்டுகளிலும் பகிரங்கப்படுத்தப்பட்டிருக்கிறது. கால்சேடோனில் கூட்டப்பெற்ற பொதுச்சங்கத்தில் புனிதரான யூவினல் ஆண்டகை அதுபற்றி உரை நிகழ்த்தியிருக்கிறுர். ரூர் நகர புனிதரான கிரேகோரியார் ஆறுவது நூற்றுண்டில் அன்னையின் ஆரோபண நிகழ்ச்சிபற்றிப் பகிரங்கமாகப் பிரகடனம் செய்திருக்கிறுர். பெரிய அல்பிரட் மன்னர் இங்கிலாந்து முழுவதிலும் ஆவணி பதினைந்தாம் நாளைப் பகிரங்க விடுமுறைத் தினமாக்கி, இத்திருநாளை மக்களனைவரும் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறுர்.



அப்போஸ்தலர்களால் ஆதிக்கிறிஸ்தவர்கட்குத் தரப்பட்ட இவ்விசுவாச உச்சாடனம் தலைமுறை தலைமுறையாகப் பக்தியாருட்சியுடன் அனுசரிக்கப்பட்டு வந்தது. நாலாவது நூற்றுண்டிலிருந்து ஜெருசலேமில் அன்னை மரியின் ஆரோபணத்தினம் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

மரியன்னையின் மரணம்பற்றி நற்செய்தி ஏடுகளில் யாதுமில்லையென்பது சிலரது வாதம். ஆம், நற்செய்தி ஏடுகள் கிறிஸ்துவின் போதனையையும், சாதனையையும் மட்டுமே குறிப்பிடுகின்றன. ஆயின், அதற்குமப்பாலுள்ள கிறிஸ்தவ வெளிப்படுதல்களும், பாரம்பரியங்களும் திருச்சபையின் ஆதிவரலாற்றை விபரிக்கின்றன. இவற்றில் சில எழுத்து வடிவில் தரப்பட்டன. மற்றவையோ, கேள்விமூலம் தலைமுறை தலைமுறையாக விசுவசிக்கப்பட்டன ஆகும்.

இந்த வெளிப்படுதல்களிலும், பாரம்பரியங்களிலும் நனகு ஆராய்தல் நடாத்தி உண்மையைப் பகிரங்கப்படுத்துதல் திருச்சபையின் தலையாய அலுவல். அங்ஙனம் திருச்சபை வெளிப்படுத்தும் உண்மைகளை விசுவசிக்கக் கத்தோலிக்கரனைவருக்கும் கடமை உண்டு.

மரியன்னை பிறப்பில் மாசற்றவளாக விளங்கினுள். வாழ்க்கையில் பரிசுத்தம் பரிமளிக்கும் பாதையில் நடந்து சென்ருள். தனது திருமகனரின் இரட்சணிய அலுவலில் தன்னை முற்றுகக் கையளித்தாள். ஆகவே, தம் திருமகனர்போல மாசணுகாத இப்புனிதவதியும் பரலோகத்துக்கு உடலோடு எடுபட்டதில் வியப்பொன்றும் இல்லையே.

இறைவன் மரியன்னையை எவ்வளவுதூரம் நேசித்தாரென்பதற்கு இந்நிகழ்ச்சி ஓர் எடுத்துக்காட்டு. முதற்பெண்ணுகிய ஏவாள், இறைவனின் ஆணையைப் புறக்கணித்து மனுக்குலத்துக்கு அவமானமாக விளங்கினுள். இந்த இரண்டாவது ஏவாள் தன்னை முழுவதும் மனுக்குலத்தின் இரட்சணியத்தில் அர்ப்பணித்து இறைவனின் இணையற்ற அன்புக்குரியவள் ஆனுள்.

மரியன்னையின் வீரமிக்க இச்செயலுக்குரிய சன்மானம் அவளுக்கு விண்ணுலகில் இறைவனுல் தரப்பட்ட திருமுடியாகும். ஆயின், உடலோடு பரலோகத்திற்கெடுக்கப்பட்ட செயலே அவளுக்கோரு கிரீடமாக அமைந்துளது. என்ருலும் பாதகமில்லையல்லவா?

இறைவனின் கட்டளைகட்குப் பணிவோருக்கு, அவரது ஆணைகளை ஏற்றுக்கொள்வோருக்குத் தரப்படும் சன்மானம் சாதாரணமானதலல என்பதற்கு மரியன்னையின் ஆரோபணம் ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

## கூறே அடிகளாருக்கு நம்நாட்டுப் புரொட்டஸ்தாந்தர் செய்த மரியாதை

சென்றவாரம் கொழும்பு வை. எம். சி. ஏ. மண்டபத்தில் பிறகிறிஸ்தவ சபைகள் கொண்டாடிய தேசிய கிறிஸ்தவ சங்கத்தின் வைபவத்தில் பிரதான அதிதியும், பேச்சாளருமாகக் கருதினல் கூறே அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார். ஒரு கத்தோலிக்க மேற்றிராணியாரை இத்தகைய பிரதான புரட்டஸ்தாந்து சபையினரின் கூட்டத்தில் இவ்வாறு கௌரவிக்கப்பட்டது இதுவே முதல்முறையாகும். அக்கொண்டாட்டத்தில் அங்கிளிக்கன் சபை இலங்கைத் தலைவர் ஹறல்ட் டி சொயிசா அடிகளாரும், குருநாகல் அங்கிளிக்கன் மேற்றிராணியார் டக்டர் விக்கிரமசிங்கியும், பிறகிறிஸ்தவ சபைத் தலைவர்களும் சமுகம்கொடுத்திருந்தனர். கருதினல் அடிகள் கொழும்பு அதிமேற்றிராசன விக்கார் ஜெனறலாகிய வண. ஜோ டி மெல் சுவாமியாருடன் அங்கு சென்ருர்.

## தமக்கு நட்டம் ஏற்படினும் ஆதரிப்பு

தென் அமெரிக்க தேசத்தில் புதிய அரசாங்கம் கமக்கமக்காரரின் நிலச் சீர்திருத்தத்துக்கு முக்கிய இடம் அளித்திருக்கின்றது. அங்கே ஒருசிலரின் கையிலேயே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் சிக்கிக்கிடக்க அதில் பொதுமக்கள் கூலிக்கு வேலைசெய்து வயிறுகழுவி வருகின்றனர். இந்நிலைமையை அகற்றி கமக்காரர்கள் ஒவ்வொருவரும் வசிக்கவும் பண்படுத்தவும் நிலம் பெறக்கூடிய தன்மையில் புதிய சட்டம் வகுக்கப்பட்டிருக்கின்றது. இப்புதிய சட்டத்தை அந்நாட்டு மேற்றிராணியார் மிக நீதியான சட்டமென ஆதரித்திருக்கின்ருர். இச்சட்டத்தினுல் அந்நாட்டுத் திருச்சபைக்கு நில நட்டம் ஏற்படினும் அதைத் தாம் ஆதரிப்பதாக அறிவித்திருக்கின்ருர்.

## நம் பிரதமருக்கு ஓர் இல்லக்கிழத்தி வேண்டும்

இலங்கை இல்லப்பெண்களின் சங்கத்தைச்சேர்ந்த துணிச்சல் மிக்க ஒருமாது பிரம்மச்சாரியாக இருக்கும் எம் பிரதமருக்கு ஒரு சூடான கடிதம் எழுதியிருப்பதாக அறிகிரும். வீட்டுக்கு வேண்டிய பொருள்களின் விலையின் ஏற்றத்தை எமது பிரதமர் அறியாதிருப்பது ஏனே எனக் கேட்டு அதற்குக் காரணம், அவ்விலையேற்றங்களைச் சீவியத்தில் அனுபவிப்பதை எடுத்துக்காட்ட ஓர் இல்லக்கிழத்தி இல்லாததே காரணமென்று அவர் கூறி விலைவாசிகளைக் குறைக்கப் பிரதமர் அவசியம் பிரமச்சாரி நிலைமையைக் கைவிட்டு இல்லக்கிழத்தி ஒருத்தியை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறி ஒரு கடிதம் வரைந்திருக்கிருளாம்.

## சந்திரனை அடைந்துவிட்....

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

விருத்திக்கு உகந்தவையாக மாற்றப்படவேண்டும். கடல்படுதிரவியங்கள், கரைபடுதிரவியங்கள், மலைபடுதிரவியங்கள் யாவும் கூடுதலாகப் பெறப்பெற்று மக்களின் உணவு, உடை, உறைவிடம், உத்தியோகம் போன்ற அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாக்கப்படவேண்டும். உயிர்களை, நாடுகளை அழிக்கும் துறையில் நடாத்தப்பட்ட ஆராய்ச்சிகள் யாவும் தொடர்ந்து உயிர்களை, நாடுகளைக் காக்கும் அரும் பணிகளில் பயன்படுத்தப்படவேண்டும்.

வெளியுலக ஆராய்வுகளைத் துரிதப்படுத்தும் வேளையில் எம்மைச் சுற்றி வாழும், எமது உதவியை நாடி வாழும் எமது சகோதரரை நாம் கவனியாது விடுதல் தகுதியா? நீதியா? தருமமா? அதுபோலவே எமது அயல் நாடுகளில்—பிறநாடுகளில் வாழும மக்களின் வாழ்வு மறுமலர்ச்சியடைய நாம் எலலவரும் எல்லாத் துறைகளிலும் அகில உலக மக்களுடனும் ஒத்துழைக்க வேண்டிய அருங்கடமை பூண்டவர்களாயிருக்கிருேம். சந்திரனுக்குச் சென்று திரும்பிய விண்வெளி வீரர் இவ்வுலக மக்களுக்குக் கொண்டுவந்த ஒரு தூது உணடு. அது நம் ஆதிமக்கள் நம்பி வாழ்ந்து வந்த "ஒன்றே உலகம், ஒன்றே உலக குலம், ஒருவனே தெய்வம்" என்ற உணமைதான். இவ்வுண்மையை நாம் எல்லவரும் நன்கு விளங்கி அதற்கியைய தேசம், நாடு, நிறம், சாதி, மொழி சமயம் என்பனபோன்ற மக்களிடையே நிலவும் பாகுபாடுகளை அற்பமேனும் பொருட்படுத்தாது இனிமேல் சகலரும் சுபீட்சமாக வாழ வழி வகுக்க வேண்டியவர்களாயிருக்கிருேம்.

"உன்னைப்போல் உன் அயலானையும் நேசிப்பாயாக" என்ற எமது திரு மீட்பரின் திரு வாக்குக்கு நாம் செவிசாய்த்து, அவற்றிற்கியைய நாம் ஏனைய மக்களை எவ்வித சமுதாயப் பாகுபாடுகளையும் பொருட்படுத்தாது நேசித்து வாழக் கடமைப்பட்டிருக்கிருேம.

நாம் ஆதியாகமத்தில் வாசிக்குமாறு "நமது சாயலின்படி நமக்கொப்பான மனிதனை உண்டாக்குவோமாக. சமுத்திர மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், நாட்டு மிருகங்களையும், பூவுலக முழுவதையும், பூமியிலுள்ள யாவற்றையும் அவர்கள் ஆளக்கடவார்கள்" என்று இறைவன் இயம்பினுர். கடவுள் மனிதனைத் தமது சாயலாகப் படைத்தார். கடவுளின் சாயலாகவே அவனைப் படைத்தார். கடவுள் அவர்களை ஆசீர்வதித்து பலுகிப் பெருகிப் பூமியை நிரப்பி அதைக் கீழ்ப்படுத்தி சமுத்திர மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும பூமியில் ஊர்ந்து திரியும் சகல பிராணிகளையும ஆண்டுகொள்ளுங்கள் என்று அவர்களுக்குச் சொன்ஞர். அப்படியே ஆயிற்று. கடவுள் தாம் உண்டாக்கின யாவற்றையும் பார்த்தார்; இதோ அது மிகவும் நல்லதெனறு கண்டார்" (ஆதியாகமம் அதி. 1 : வச. 26—28).

ஆனுல், அதே கடவுள் பரலோகத்திலிருந்து உலகத்தை இன்று பார்க்கும்பொழுது அதுமிகவும் நல்லதென்று கண்டு மகிழ்ச்சியடைவாரா? அன்றேல் உலக மக்களின் தற்கால அவலநிலையைக்கண்டு சஞ்சலமடைவாரா? அவர் நல்லதென்று கண்ட உலகை மக்கள் கொடியதாக்குவதேனே? எனவே, மீண்டும இவ்வுலகம தனது வனப்பையும், வளத்தையும் பெற்று "மிகவும நல்லதென்று" தேவன் காணக்கூடிய, கூறி மகிழக் கூடிய நிலையை ஏற்படுத்துவது உலகெல்வாழ் சகலரதும் கடனுகும.

## பிறநேசத் தொண்டின் தெய்வீகத்தன்மை

இவ்வுலோகத்திலே சிவிக்கப்பட்டதன் நிகரற்ற அதிமேன்மைதங்கிய சீவியம் நமதாண்டவராகிய யேசுக்கிறிஸ்துநாதரின் சீவியமென்பதை நாம் எல்லோரும் விசுவசிக்கிருேம். இந்த உலகத்திற் தோன்றிய எந்த அரசராவது யேசுவைப்போன்ற உண்மையான அதிமகத்துவம் பொருந்திய இராஜரீகத்தை ஒருபோதும் அடைந்ததேயில்லை, யுத்தகளத்தில் உதித்தளந்த வீரனுவது நசரேத்துத் தச்சன் நிகழ்த்திய மாபெரும் தீரச்செயல்களுக்கு ஒப்பானவைகளை எப்போதாவது செய்ததேயில்லை. கிறிஸ்துவின் அழகான வாழ்க்கையில் விளங்கிய குறிக்கோள்தான் யாது? அதுதான் "சேவை! சுயநலங் கருதாத சேவை!" அவர் சேவிக்கப்படவல்ல' சேவை செய்வதற்கே சீவித்தார். அவர் மற்றவர்களுக்காகவே தன்னை முழுதும் அர்ப்பணம் செய்தார். தன்னைப்பற்றி அவர் ஒருபோதும் நினைத்ததேயில்லை தனக்காக ஓர் அற்பகிருத்தியம் முதலாய்ச் செய்தவருமல்ல. தன்சேவையின் கொடுமுடியாகத் தனது இரத்தத்தைக் கடைசித்துளி பரியந்தம் இறைத்துத் தன் ஆருயிரையே எமக்காகப் பலியாக்கினுர். இதுவன்ருே சேவையின்சிகரம்! இவ்வுலகில் ஒருவன் சீவிக்கக்கூடிய அதிஉன்னதமான வாழ்க்கை, சுயநலமற்ற அன்பு நிறைந்ததாயிருக்க வேண்டுமென்பதை நமதாண்டவரின் முன்மாதிரிகையிலிருந்து கற்றுக்கொள்ளுவோமாக! அதிஉன்னத கிருத்தியத்தை முதலாய் சுயநலம்கெடுத்து அதன் அழகைப் பாழாக்கி விடுகின்றது. ஆகவே, எமது வாழ்க்கை கிறிஸ்துமயமாயிருக்க வேண்டுமானுல் சுயநலத்தை அறவேயொழித்துப் பிறநேசத் தொண்டை எமது சீவியத்தின் குறிக்கோளாகக் கொள்ளுவோமாக!

பாப்புவின் முப்புரை காவலன்; ஆயரின் அறிவுரை காவலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

**ஆவணி — 1969**

| | | | |
|---|---|---|---|
| 17 | ஞாயிறு | பரி. ஆவி. விழா. பின் 12-ம் ஞா. | [ப] |
| 18 | திங்கள் | கிழமைப் பூசை | [ப] |
| 19 | செவ்வாய் | புனித யூட் அருளப்பர் | [வெ] |
| 20 | புதன் | புனித பெர்ணுந்து | [வெ] |
| 21 | வியாழன் | புனித சாந்தாள் பிரான்சிஸ்கு அருளமாள் | [வெ] |
| 22 | வெள்ளி | புனித கன்னிமரியாளின் மாசற்ற இருதய விழா | [வெ] |
| 23 | சனி | புனித பிலிப் பென்சியார் | [வெ] |

## காவலன் கருத்து

# மரியாய் பக்தி அன்றும் இன்றும்

கத்தோலிக்கர் மத்தியில் பரிசுத்த கன்னிமரியம்மாள் மேலுள்ள பக்தி மாற்றமடைந்து வருகிறதா? கத்தோலிக்க திருச்சபை கிறிஸ்தவ ஒற்றுமைக்கு அடிகோலவேண்டி மரியாயின் ஸ்தானத்தைத் தாழ்த்தியுள்ளதா? இவை இரண்டும் ஒரே அர்த்தமுள்ள இரு கேள்விகள் அல்ல. அவை முற்றும் வேறுபட்டவையாகும்.

இந்த வினுக்களுக்கு விடைகூறுமுன் ஒரு காரியம் தெளிவாக்கப்படவேண்டும். மக்கள் பக்தி முயற்சி வேறு. விசுவாச சத்தியம் வேறு. பின்னதுதான் திருச்சபையால் வரையறுக்கப்படவேண்டியது. தனிப்பட்ட மனிதர் தேவனுக்கும் பரிசுத்தவான்களுக்கும செலுத்தும் பல்வேறு விதமான வணக்கமே மக்கள் பக்திமுயற்சியாகும். இது காலத்துக்குக் காலம், இடத்துக்கு இடம், ஆளுக்கு ஆள் தன்னும் மாறுபடக்கூடியது. மீட்புக்கு அத்தியாவசியமான உண்மைகளே விசுவாச சத்தியங்கள், மரியாயைப் பற்றிய எந்த விசுவாச சத்தியத்தையாவது திருச்சபை மாற்றவில்லை. மாற்றப்போவதுமில்லை.

மரியாய் சம்பந்தமான மக்கள் பக்திமுயற்சிகளில் ஏதாவது மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றனவா? ஆம். இருபதுவருடங்களுக்குமுன் சதாசகாயமாதாநோவினைகளிலும் வணக்கமாதப் பக்தியிலும் ஏராளமான மக்கள் பங்குபற்றுவது வழக்கமாயிருந்தது. ஆனல் இன்று இவ்விதமான பக்திமுயற்சிகளில் பங்குபற்றுவோர் தொகை வெகுவாகக் குறைந்துவிட்டது. காரணமென்ன? திருச்சபையின் நடவடிக்கைகள் எதுவும் இதற்குக் காரணமென்று கூறமுடியாது. மக்கள் தாமாகவே சில பக்திமுயற்சிகளைக் கைவிடுவதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். அவற்றுள் பிரதானமானது திருவழிபாட்டு மறுமலர்ச்சியாகும். அன்று திருவழிபாட்டில் நேரடியாகப் பங்குபற்ற முடியாத மக்களுக்கு உரத்துச் செபிக்கவும் பாடவும் பங்குபற்றவும் மக்கள் பக்திமுயற்சிகள் இடமளித்தன. ஆனல் இன்று நிலைமை மாறிவிட்டது. அன்று பக்திமுயற்சிகளில் மக்களுக்கிருந்த பங்கு இன்று திருவழிபாட்டிலேயே அவர்களுக்குக் கிடைத்துவிட்டது. பூசைப்பலியே கிறிஸ்தவ வழிபாட்டின் மையமென்றும் ஏனையவெல்லாம் மேலதிகமானவை என்றும் அவர்கள் உணர்கிறுர்கள். ஆனல் இதன் பயனுக மக்கள் மனதில் மாதாவின்மேலுள்ள பக்தி குறைந்து போய்விட்டது என்று யாரும் கூறமுடியாது. குடும்பங்களில் இன்னும் செபமாலை ஓதப்பட்டுத்தான் வருகிறது, மாதாவின் திருப்பதிகளுக்கு ஏராளமான மக்கள் யாத்திரை செய்துகொண்டு தானிருக்கின்றனர். எனவே மாந்தர்மனதில் மாதா இன்றும் குடிகொண்டு தான் இருக்கின்ருள்.

முன்னெந்தச் சங்கத்தையும்விட இரண்டாம் வத்திக்கான் சங்கமே தன் சாசனங்களில் மாதாவுக்கு அதிக இடம் அளித்து திருச்சபையின் தாய் எனப் போற்றுகிறது.

திருச்சபை மாதாவின் ஸ்தானத்தைத் தாழ்த்தவில்லை. ஆனல் மக்கள் பக்திமுயற்சிகள் மாற்றமடைகின்றன எதிர்காலம் எப்படி இருக்கும்? சில பக்திமுயற்சிகள் தோன்றலாம், மறையலாம். ஆனல் கத்தோலிக்கர் உதடுகளில் "அருள் நிறைந்த மரியாயே வாழ்க!" என்னும் வாழ்த்தொலி எழுந்த வண்ணமே இருக்கும். தேவஸ்துதிகளில் மாதாவின் நாமமும், அவளது மகிமைப் பிரதாபமுள்ள ஆரோபணமும் என்றும் இடம் பெறும். தமது அன்னையின் புனித உடல் அழிவுருதவாறு காத்த திருக்குமாரன் அவளது புகழுடம்பு தேய அனுமதிப்பாரா?

# சந்திரனை அடைந்துவிட்டோம் ஆனல், இனிமேல் . . .

**— பி. சவரிமுத்து —**

விண்வெளிப் பிரயாணம் வெற்றிகரமாக நடந்ததையிட்டு அகில உலக மக்களும் அக்களிப்பு அடைகின்றனர். விண்வெளி வீராகிய (அப்பொல்லோ 11 கொண்டு சென்ற) நீல ஏ. ஆம்ஸ்ரோங், எட்வின் ஈ. அல்றன், மைக்கல் கொலின்ஸ் ஆகிய மூவருக்கும் ஆனந்த உணர்ச்சியுடன் உலக மக்கள் சகலரும் அஞ்சலி செய்கின்றனர். மனித சமுதாயம் ஒரு புதிய சகாப்தத்தை அடைந்திருக்கிறது என்று வரலாற்றுசிரியர்கள் வரைந்திருக்கின்றனர். தற்போது மக்களின் பாதம் பூமியிலும் அவர்களின் சிரம் சந்திரனிலும் இருக்கிறது என்று ஆராய்ச்சியாளர் பெருமிதம் கொள்கின்றனர். இவர்கள் கண்ட முடிபுதான் என்ன? சென்ற வியாழன 24-7-69 ல் கவுஸ்ரன் நிலையத்திலிருந்து வெளிவந்த அறிக்கை அதை விளக்குகிறது. "பூமியை உருவாக்கின அதே சக்திகளே சந்திரனையும் உருவாக்கியிருக்கின்றன என்று கூறலாம்" என்பதே. மேலும் இவ்வுண்மையை ஆழமாக நாம் சிந்தித்துப் பார்த்தால் உலகம் ஒன்றே. அதற்கு எல்லைகள் இல்லை. இனிமேல் எல்லோரும் எல்லோருக்காகவும் அமெரிக்கர், ருஷியர், ஜேர்மனியர், பிரென்சுக்காரர் என்ற பேதமின்றி பூமியில் வாழும சகல மக்களினதும் நன்மைக்காக ஏகோபித்து ஒத்துழைக்க வேண்டியவர்களாயிருக்கிறேமென்பதே வெளியாகின்றது. தற்காலச் சமூகத் தொடர்புக் கருவிகளாகிய வானெலி, படக்காட்சி, தொலைவுக்காட்சி, பத்திரிகைகள் போன்ற விஞ்ஞான விருத்தியின் பயனுகிய சாதனங்கள் மூலம் படித்தவர்களும் படியாதவர்களும் சந்திரமண்டலத்தை ஆடி 21-ம் திகதி ஆம்ஸ்ரோங்கும் அவரின் சகாக்களும் அடைந்த சம்பவத்தை அறியக்கூடியதாயிருந்தது. இப்பெரும் சாதனை நமக்குக் கற்பிக்கும் பாடம் தான் என்ன? இவர்களின் வெற்றி ஒரு தனிப்பட்ட தேசத்து மக்களின் அல்லது அந்நாட்டு விஞ்ஞானிகளின் வீரத்தைக் காட்டவா? இல்லவே இல்லை. ஓர் ஆட்சிமுறை அல்லது ஒரு பொருளாதார அமைப்பு வேறொன்றைவிட மேன்மையுடையது என்று நிரூபிக்கவா? இல்லவேயில்லை. ஆனல் தேவன் மனிதனுக்குக் கொடுத்த புத்தியையும் சக்திகளையும் கொண்டு இயற்கையை வென்று இறைவனின் பெருமையை உணர்வதற்கென்றே சொல்லவேண்டும்.

விஞ்ஞானம் என்பது "தேவனை மறுப்பது" என்றும், விஞ்ஞானிகள் என்போர் "தேவனிலும் சமயத்திலும் பற்றற்றோர்" என்றும் எண்ணிய காலம் தற்போது தீவிரமாக மாற்றமடைந்துகொண்டு வருகிறது. ஆதியாகமத்தில் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கூறப்பட்டவை சகலதும் உண்மை என்று தற்கால விஞ்ஞான ஆராய்ச்சிகள் சான்று பகருகின்றன. அறிவு அதிகரிப்பதால் இறைவன் அற்றுப்போவதில்லை. அங்கு இங்கு எனுதபடி எங்கும் சூக்குமமாகக் காட்சி ளித்துக்கொண்டே இருக்கிறுன் இறைவன் எபைதை நாம் நன்கு உணரவேண்டும். தற்காலத்தில நாம் இயற்கையில் காணும் பல பொருட்களின்—இறைவனின் படைப்புக்களின்—தன்மையைப்பற்றி மிகுந்த அறிவைப் பெற்றுள்ளோம் மெய். என்றுலும நாமறியாததோ இன்னும் அதிகம் உளது என்பதை நாம் மறத்தலாகாது.

விண்வெளிப் பிரயாணம் சித்திகரமாக நடைபெற்றுள்ளது என்பது மெய். ஆனல் அதன் சித்திக்காக அல்லும் பகலும் அயராது ஆர்வத்துடன் உழைத்த ஆயிரமாயிரம் நிபுணர்கள், ஆராய்ச்சியாளர்கள், பல்வேறு தொழில் நுட்பத் தொழிலாளர், ஆண்கள், பெண்கள், வளர்ந்தோர், வாலிபர் ஆகியோர் பலர் இருக்கின்றனர் என்பதை நாம் மறத்தலாகாது. மேலும இப்பணியில் பல்கோடி டொலர் பணத்தை அள்ளி வீசிய அமெரிக்க பொது மக்களுக்கு அகில உலக மக்களின் நன்றியும் உரித்தானதே.

வானமண்டலப் பிரயாணத்தைச் சித்திகரமாக நடத்த எடுக்கப்பட்ட முயற்சிகள், நடாத்தப்பட்ட ஆராய்ச்சிகள் ஆதியன யாவும் இப்பூமண்டலத்தில் வாழும் மக்களின் வாழ்க்கையை வளம்படுத்த இனிமேலாவது உபயோகிப்பது சகல மக்களினதும் அருங் கடனுயிருக்கிறது என்பதை நாம் வற்புறுத்த விரும்புகிறோம்.

பற்பல நுட்பம் மிகுந்த விஞ்ஞான ஆராய்ச்சிகளின் பயனுகத் தற்போது கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரங்களும் அவற்றின் சக்திகளும் அவற்றை இயக்கும் வல்லுனரின் நுண்மாண்நுழை புலமும் இனிமேல் இப்பூமியில் வாழும் சகல மக்களின் நிலையைச் சீர்ப்படுத்தித் திருப்திகரமாக்க உபயோகிக்கப்படவேண்டும். விண்வெளியைப்பற்றி இதுகாறும் நாம் செலுத்திய கவனம் இனிமேல் இப்பூமியின் சமவெளியைப்பற்றி நாம் செலுத்தவேண்டும். காடுமூடான பகுதிகளெல்லாம் சமமாக்கப்பட்டு மக்களின் உணவு அபி

(தொடர்ச்சி 9-ம் பக்கம்)

# மடுத்தாய் வாழ்த்து

— ஆசிநாதர் —

மடுத்தாயே என்பவர்தம் மனமணக்கும்
வாய்மணக்கும், வறுமை நீங்கும்
மடுத்தாயே என்பவர்தம் வல்வினைபோம்
தொல்வினைபோம் தொழிற்பே றுண்டாம்
மடுத்தாயே என்பவர்க்கு மதிபெருகும்
கலைபெருகும் கணிப்பு மேவும்
மடுத்தாயே என்பவர்கள் பிணிதவிர்ந்து
சுகமிகுந்து மகிழ்ந்தே வாழ்வர்

❊

மடுத்தாயை அண்டினருள் அவளுதவி
அடையாரிவ் வையத் துண்டோ ?
மடுத்தாயைப் போலெவர்க்குங் கேட்டவரம்
தரஇயையும் மனத்தா ருண்டோ ?
மடுத்தாயைப் போலவெமைக் கருணையொடு
வளர்த்துவரும் தாய்தா னுண்டோ ?
மடுத்தாயைப் பேலெமக்காய்ப் பரமனிடம்
வழக்காடும் வரத்தா ருண்டோ ?

❊

மடுஅன்னையே அருட்தலைவி மடுஅன்னையே சுரர்க்கிறைவி
மடுஅன்னையே எங்நோய்க்கு மருந்தாம்
மடுஅன்னையே எமக்குதவி மடுஅன்னையே குலத்தலைவி
மடுஅன்னையே வழித்துணைவி மறைக்குஒளியாம்
மடுஅன்னையே கதிக்கதவு மடுஅன்னையே விதிப்பதவி
மடுஅன்னையே எவர்க்கும் நிதியாம்
மடுஅன்னையே எமதுவிழி மடுஅன்னையே எமதுவழி
மடுஅன்னையே எவ்வுயிர்க்கு முயிராம்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. [illegible] அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1969 ஆம் ஆ ஆவணி மீ 16ஆம் உ சனிக்கிழமை [illegible] "[illegible] பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300தாபிதம் 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org